Nithlavarnan's Creative Album

# புத்தாக்க செருகேடு

(சிறுகதைகள், மற்றும் கவிதைகளின்தொகுப்பு)




ஆனந்தமயில் நித்திலவர்ணன்.

**Ц**

(б

# புத்தாக்க செருகேடு

(சிறுகதைகள், மற்றும் கவிதைகளின்தொகுப்பு)




**ஆ.நித்திலவர்ணன்**

*BSc with Education (Hons), MEd*

**தக்ஷனா வெளியீடு**

## நூற்குறிப்பு

| | |
|---|---|
| நூல் | : புத்தாக்க செருகேடு<br>(கலை இலக்கிய ஆக்கங்களின் தொகுப்பு) |
| ஆசிரியர் | : திரு. ஆனந்தமயில் நித்திலவர்ணன். |
| பதிப்புரிமை | : திருமதி நிஷாந்தினி நித்திலவர்ணன். |
| வெளியீடு | : தக்ஷனா வெளியீடு |
| முகவரி | : இல.10, வளாக வீதி, திருநெல்வேலி. |
| மின்னஞ்சல் | : anithlavarnan@gmail.com |
| முதற்பதிப்பு | : ஜூலை - 2008 |
| அளவு | : A5 |
| பக்கம் | : 60 |
| பதிப்பு | : Smart Printers |
| விலை | : ரூபா 100.00 |
| பிரதிகள் | : 250 |

| | |
|---|---|
| Title | : Creative Album<br>*(Collection of Short Stories and Poems)* |
| Author | : Mr. Ananthamyl Nithlavarnan |
| Copyright | : Mrs.Nishanthini Nithlavarnan |
| Publication | : Thaksana Publication |
| Address | : No.10, Campus Lane, Thirunelvely, Jaffna |
| E-mail | : anithlavarnan@gmail.com |
| First Edition | : July 2008 |
| Size | : A5 |
| Pages | : ix + 45 |
| Printed at | : Smart Printers |
| Price | : Rs. 100.00 |
| Copies | :250 |

அன்பு தந்து,
என்றும் அரவணைக்கும்
என் அன்னைக்கும்;
அறிவு தந்து,
அறிவுரை தந்து,
கலை இலக்கிய வாசம் தந்து,
வாழவைத்துக்கொண்டிருக்கும்
என் தந்தைக்கும்;
இந்நூலை
சமர்ப்பிக்கிறேன்.

– நூலாசிரியர் –

යාපනය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
*UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.*

Academic Branch,
University of Jaffna,
27.02.2004

Mr.Ananthamyl Nithlavarnan
99/SB/17

**SUBRAMANIAM RATNARAJAH MEMORIAL SCHOLARSHIP**

I am glad to inform you that you have won the above scholarship for the year 2003.

The above scholarship is awarded to you for the best performance in short story & poems.

The above prize will be awarded to you at the meeting of the Faculty Board of the Faculty of Science. The date and time will be informed to you by the Dean, Faculty of Science in due course.

Snr.Assistant Registrar / Academic

CC : Dean / Science
Bursar - for necessary action please AR/Exams

# பொருளடக்கம்

பக்கம்

அணிந்துரை vi

என்னுரை viii

சிறுகதைகள்

1) முடிவு 1, 2 ---------------------------------- 01

2) ஒரு பேனாவின் கண்ணீர் வரைந்த கவிதை ------------- 09

3) எங்கும் இருக்கும் மனிதம் ------------------------ 15

4) பதில் கடிதம் ----------------------------------- 19

5) நெருப்பை சுமக்கும் இதயங்கள் -------------------- 23

6) முளையில் கருகும் காதல்கள் --------------------- 29

கவிதைகள்

1) நாம் எங்கே போகிறோம் -------------------------- 34

2) வெகு தொலைவில் இல்லை ------------------------ 35

3) பிடிக்கவில்லை --------------------------------- 36

4) சபிக்கப்பட்டவர்கள் ------------------------------ 37

5) அடி மனதின் ஆசை இதுதான் ---------------------- 38

6) நாம் நியத்தில் எங்கு வாழ்கிறோம் ------------------ 40

7) வாழ்க்கைப்பாதை -------------------------------- 40

8) பல்கலைக்கழக கல்ஆசனத்தின் விண்ணப்பம் ---------- 41

9) ஓட்டோகிராப்பின் முகப்புப்பக்கம் ------------------- 42

10) என் எதிரிகள் ----------------------------------- 42

11) காதலின் எதிரி ---------------------------------- 43

12) காதலர்களே கொஞ்சம் நில்லுங்கள் ----------------- 44

# அணிந்துரை

அமைப்பிலும் அணுகுமுறைகளிலும் பன்மை நோக்கிய விரிவு "செருகேடு" என்ற எண்ணக்கருவால் ஒரு வகையில் வெளிப்ப டுத்தப்படுகிறது. பன்மை வாதம் (PLURALISM) மற்றும் விரிசிந்தனை, உதிர்வுகள்மீதும், உதிரிகள்மீதும் செலுத்தத்தவறிய கவனத்தை திருப்புதல் முதலிய அறிகை நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொழுது அவை வெறுமனே திரட்டல் மட்டும் ஆகிவிடுவதில்லை. அனைத்து உதிரிகள்மீதும் ஊடுருவி நிற்கும், "பொதுவான விசை" பின்-நவீனத்துவவாதிகளால் உணரப்படாத நிலையில் வாழ்நிலையின் பட்டறிவோடு சங்கமித்துநிற்கும் அடிநிலைப்புலக்காட்சி கொண்ட ஆக்கவல்லுனர்களால் பொதுவிசை முன்னெடுக்கப்படுகின்றது. இவ்வகையில் சுட்டிக்காட்டப்பட்ட சிருஷ்டியாளராக திரு ஆனந்தமயில் நித்திலவர்ணன் விளங்குகின்றார்.

வித்தியாசமான ஒரு தொகுப்பாக விளங்கும் இச்செருகேட்டில் சிறுகதைகள், கவிதைகள் என்ற நிரற்பாடு இடம்பெற்றுள்ளது. புனைகதைகளில் புனைகதைசாராப்பண்புகள் (Nonfiction) ஊடுருவுதல், புனைகதை சாரா வடிவங்களில் புனைவு ஊடுருவுதலும் சமகாலத் தொடர்பாடல்களிலும் கலையாக்கங்களிலும் மேலோங்கி வரும் செயற்பாடுகளாகின்றன. இந்த இருதள ஒருங்கிணைப்பு, ஒரு வகையில் தருக்க உலகத்துக்கும் கற்பனை உலகத்துக்குமுள்ள தொடர்புகளை வலியுறுத்தும் அறிகைத் தொழிற்பாடுகளுடன் ஒன்றிணைந்துள்ளது.

திரு. ஆ.நித்திலவர்ணனின் கல்விப்பின்னணி, கலை யாற்றல்களும் விஞ்ஞான ஆற்றல்களும் ஒன்றிணைந்த நிரலாக்கத்துடன் கூடிய பட்டப்படிப்பு அனுபவங்கள், அறிவாற்றல் வெளிப்பாடுகளுக்கு பல்கலைக்கழகத்திலே பெற்ற விருதுகள், மாணவ

சாகித்திய விருதுகள் ஆகியவற்றுடன் இவரது ஆக்கமுனைப்புக் களையும் ஒன்றிணைத்து நோக்க வேண்டியுள்ளது.

"பதில் கடிதம்", "நெருப்பை சுமக்கும் இதயங்கள்", "முடிவு 1,2", "ஒரு பேனா வின் கண்ணீரில் வரைந்த கவிதை", "எங்கும் இருக்கும் மனிதம்", "முளையில் கருகும் காதல்கள்" முதலிய சிறுகதைகள், மனிதாபிமானத்தின் சிறகுகளை நீதியின் நிரல்களுக்கு இழுத்துச் செல்கின்றன.

"வெகு தொலைவில் இல்லை", "பிடிக்கவில்லை", "நாம் எங்கே போகிறோம்", "பல்கலைக்கழக கல்ஆசனத்தின் விண்ணப்பம்", "காதலர்களே கொஞ்சம் நில்லுங்கள்", முதலாம் கவிதைகள் இளமை அறிகையினையும், இருப்பின் உராசல்களையும் குதறி விடுகின்றன.

படைப்பாற்றல் மலர்ச்சியின் பரிமாணங்கள், கவிதை ஓவியங்களையும், ஓவியக்கவிதைகளையும் கோடிடமுடியாமல் இணைத்து விடுதல் உண்டு. இந்த விசாலித்த ஒருங்கிணைப்பின் முகிழ்ப்பாக முன்னெடுக்கும் நித்திலவர்ணனின் எழுத்தாக்க வீச்சு ஆக்க மலர்ச்சியின் தொடுவானத்தை நோக்கி விசை கொள்ள எமது வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் சபா.ஜெயராசா**

தலைவர்,

கொழும்பு தமிழ்ச்சங்கம்.

# என்னுரை

எனது புத்தாக்க செருகேட்டின் பக்கங்களை உங்கள் பார்வைக்கு சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். என்னால் படைக்கப்பட்ட சிறுகதைகள் மற்றும் கவிதைகளை இதில் சேர்த்து ள்ளேன். பெரும்பாலான ஆக்கங்கள் எனது பல்கலைக்கழக கற்றல் காலத்தில் படைக்கப் பட்டவையாகும். படைப்பாக்கத்திற்கான உந்துதல் அக்காலத்திலேயே எனக்கு அதிகமாக கிடைத்தது.

எனது சிறுகதைகளின் நோக்கம், வாழ்வியலின் பல்வேறு தள பரிமாணங்களில் நடைபெறும் நிகழ்வுகளினூடாக சமூகத்தின் முக்கிய பிரச்சினைகளை இனங்காட்டி அவற்றிற்கு தீர்வுகளை முன் வைத்தலாகும். இதில் எவ்வளவு தூரம் வெற்றிபெற்றிருக்கிறேன் என்பதை மதிப்பீடு செய்யும் உரிமை வாசகர்களாகிய உங்களுக்கே உண்டு.

என் கவிதைகள் அவற்றிற்கு உரிய வடிவமைப்புக்குள் உள்ளனவோ தெரியாது. ஆனால் ஒரு சில வரிகளில் சமூகம் சார் எனது புலக்காட்சிகள், மற்றும் மனஆதங்கங்கள் என்பவற்றை இவற்றினூடாக சொல்லியுள்ளேன்.

இப்புத்தாக்க செருகேட்டுக்கு அணிந்துரை வழங்கிய கல்வியுலகின் புகழ் பூத்த பேராசிரியரும், எனது குருவுமாகிய பேராசிரியர் சபா. ஜெயராசா அவர்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றிகள். இந்நூலை வெளியிட ஊக்கமளித்த நல்லுள்ளங்களுக்கும், மற்றும் சகல விதத்திலும் உறுதுணையாய் இருந்த எனது குடும்பத்தவர்களும் நன்றிக்குரியவர்கள்.


ஒரு நூல் கொண்டுள்ள விடய உள்ளடக்கத்தினால் அது வெற்றி பெறுவதில்லை. அதன் வடிவமைப்பு, எழுத்துருவாக்கம் என்பவற்றிலும் அதன் வெற்றி தங்கியுள்ளது. அந்த வகையில் இந்நூலினை சிறப்பாக வடிவமைத்து அச்சிட்டுத்தந்த நண்பன் து.லெனின் அவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

எனது கலை இலக்கியங்களை, புது வடிவத்தில் இந்நூல் மூலம் அறுவடையாக்கியுள்ளேன். இதிலுள்ளவை பதர்களா? அல்லது நெல் மணிகளா என சுவைத்துப்பார்த்து நீங்கள்தான் சொல்ல வேண்டும். எனது எதிர்கால அறுவடைகளை செம்மைப்படுத்த வழிகாட்டுவீர்கள் என நம்புகிறேன். பயனுள்ள விமர்சனங்களை உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

எல்லாவற்றிற்கு மேலாக இந்நூல் வெளிவர அருள் கொடுத்த இறைவனை நினைந்து, அவனிடம் இந்நாட்டிலும் இவ்வுலகிலும் சாந்தியும் சமாதானமும் நிலவ பிரார்த்திக்கிறேன்.

ஆ.நித்திலவர்ணன்.
இலக்கம் 10,
வளாக வீதி,
திருநெல்வேலி.

# சிறுகதைகள்



படம்: இணையம்

1) முடிவு 1, 2
2) ஒரு பேனாவின் கண்ணீர் வரைந்த கவிதை
3) எங்கும் இருக்கும் மனிதம்
4) பதில் கடிதம்
5) நெருப்பை சுமக்கும் இதயங்கள்
6) முளையில் கருகும் காதல்கள்

சிறுகதை 1

# முடிவு 1, 2




படம் : தினக்குரல்

இப்பொழுதெல்லாம் ஊரில் ஆளில்லாமல் புதர் மண்டிப்போன வீடுகளில் விளக்கொளிகளைக்காணமுடிகிறது. கிராமத்துத்தெருக்களில் சன நடமாட்டம் அதிகமாகவே தென்படுகிறது. நல்ல தண்ணீர் கிணற்றடியில் உடனடியாக தண்ணீர் எடுக்க முடியாமல் கியூ நிற்கிறது. இத்தனைக்கும் காரணம் எம்மூரில் இருந்து இடம்பெயர்ந்து வன்னி சென்றவர்கள் திரும்பி வரத்தொடங்கியிருப்பதுதான்.

அவன் வீட்டில் தினம் ஒரு குடும்பத்துக்கு மதியச்சாப்பாடு. அவன் வீட்டில் மட்டுமன்றி ஊரில் இடம்பெயராது இங்கிருந்தவர்கள் திரும்பி வந்தவர்களுக்கு விருந்தளித்து பூரிப்படைகின்றனர். இனி எக்காலம் காண்போமோ என்றிருந்தவர்கள் உறவுகளைக் கண்ணெதிரே கண்டவுடன் கட்டியணைத்துக்கொள்கின்றனர். இங்குள்ளவர்களின் வாழ்க்கைத்தரத்தினை கண்ணுற்றவர்கள் தம்முடைய வாழ்க்கையுடன் ஒப்பிட்டார்களோ அல்லது தாங்கள் பட்ட கஸ்டங்களை நினைத்துப்பார்த்தார்களோ என்னவோ தாங்கள் வீணாக இடம்பெயர்ந்ததாக வாய்க்கொரு தடவை சொல்லிக்கொண்டனர். அவனும் தன் வாழ்க்கையில் எடுத்த ஒரு முடிவு பற்றி எண்ணிப்பார்க்கிறான்.

ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நாம் எடுக்கும் முடிவுகள் எங்கள் வாழ்க்கையில் மிகவும் முக்கிமானவை. சில எங்கள் எதிர்கால வாழ்க்கையை ஏணியின் உச்சிப்படிகளில் கொண்டு விடும். வேறு சில அதல பாதாளத்தில் தள்ளி விடும். பல முடிவுகளை எடுக்க எங்களுக்கு நீண்டநேர அவகாசம் எடுக்கும். சில வேளை கால அவகாசம் கிடைக்காமல் போகலாம். பலரது ஆலோசனைகளைப் பெற்றும் முடிவு எடுக்கப்படலாம். எவரின் ஆலோசனை இன்றியும் எடுக்கப்படலாம்.

அவனும் அவன் வாழ்க்கையின் இக்கட்டான கட்டத்தில் எவரது ஆலோசனையும் இன்றி ஒரு நிமிட நேரத்தில் முடிவு ஒன்று எடுத்தான். அம்முடிவினால் அவன் எதிர்கால வாழ்க்கை முன்னேறியதா? அல்லது பாழாகிப்போனதா? அவன் இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கிறானா? அல்லது இறந்து விட்டானா? இது ஒரு உயிருள்ள மனிதன் எழுதும் கதையா? அல்லது கல்லறைகளும் பேசத்தொடங்கி விட்டனவா?

இடப்பெயர்வுகள் மலிந்து விட்ட தமிழ் மண்ணில் குடாநாடு வன்னிநோக்கி இடம்பெயர்ந்த போது, நடக்கமுடியாத அப்பாவுடன் அம்மாவும் இளைய சகோதரரும் இங்கு தங்கி விட்டனர். ஆநிலவனும் இரண்டாவது அண்ணனும் ஓரளவு வளர்ந்திருந்ததால் அவனது பெற்றோரை பயப்பீதி தொற்றிக்கொண்டது. இங்கு வரும் இராணுவம் என்ன செய்யுமோ என்ற பயத்தில் அவர்கள் இருவரையும் மாமியார் குடும்பங்களுடன் அனுப்பிவிடத்தீர்மானித்து விட்டனர். மூத்த மச்சான் ஒருவன் சொந்தமான போட் வைத்திருந்ததால் அவரே ஊருக்கு வந்து தனது குடும்ப உறவுகள், சாம்ராஜ்யத்தினை அழைத்துக்கொண்டு சென்றார். கிளாலி வரை லொறியில் பயணம். அவனும் அண்ணனும் அவர்களது உடுப்புப்பொதிகள், சைக்கிள்கள் என்பவற்றுடன் ஏற்றப்பட்டனர். கவலை தொற்றிக்கொள்ள பேயறைந்த முகத்தினை கால்களிடையே தொங்கப்போட்டுக்கொண்டு லொறியின் மூலையோரத்தில் குந்திக்கொள்கிறான். இதுவரை கோழியின் கூட்டில் இருக்கும் குஞ்சுகள் போன்று பெற்றோர் பாதுகாப்பில் இருந்தவர்கள் தனித்து விடப்பட்டவர்கள் போன்ற உணர்வில் திளைத்திருந்தனர்.

நூல் அறுந்த பட்டமாக போகும் திசை, விழும் திசை தெரியாமல் போய்க்கொண்டு இருக்கிறார்கள். பட்டமானது மீட்கமுடியாத மிக உயரமான

முள்ளுள்ள மரத்தில் சிக்கலாம். அப்பொழுது அதன் உடலெல்லாம் ரணமாக்கப்பட்டு என்புக்கூடுகள் முறிந்து போகும். அல்லது ஆழம் தெரியாத கடலில் வீழ்ந்து கரைந்து சட்டம் மட்டும் நீரில் மிதக்கலாம். இல்லையேல் நூல் மட்டும் மரத்தில் சிக்கி தூக்கில் தொங்கும் குற்றவாளி போல் அந்தரத்தில் தொங்கி அணுஅணுவாய் சிதைய வேண்டும். அதிஷ்டம் இருந்தால் சிலவேளை புற்றரையில், வயல்வெளியில் விழலாம்.

வான்வெளியில் வளைய வந்து ஆக்ரோசமாக குண்டுகளை வீசிக்கொண்டிருக்கும் வான் அரக்கனின் கொடும் தாக்குதல்களுக்கிடையிலும் எதுவித பாதிப்பும் இன்றி லொறி கிளாலிக்கரையை அடைந்தது. அங்கு ஒரு ஜன சமுத்திரமே. சமுத்திரத்தில் பயணிக்காத்திருந்தது. ஒவ்வொருவரிடமும் பயம் கொண்ட முகபாவமும், அவசர செயற்பாடுகளும் தென்பட்டன.

இன்னும் வாழவேண்டும் என்ற அற்ப ஆசையினால் தமது உயிரைக்காப்பாற்றிக்கொள்ள அந்தக்கடல் நீரேரியை கடந்து விடக்காத்திருப்பவர்கள் தக்கன பிழைத்துக்கொள்ளும் என்ற டார்வினின் கூர்ப்புக்கொள்கைப்படி நான் முந்தி நீ முந்தி என்று படகில் ஏறிவிட வேண்டும் என சனம் நெருக்குப்பட்டுக்கொண்டு இருந்தது. ஏனெனில் இறங்கு துறையை நேரம் விடாது வழைய வந்து குண்டு வீசும் விமானங்களின் குண்டுகள் எவர் தலையிலும் எப்பொழுதும் விழலாம். அதை விட முன்னேறி வரும் இராணுவம் எக்கணத்திலும் இறங்கு துறையை கைப்பற்றலாம். கரையோரம் எங்கும் பெரும் எண்ணிக்கையான உடைமைகள் அவை சடப்பொருள் என்ற காரணத்தினால் ஏற்றப்படாமல் காத்திருந்தன. ஆயிரக்கணக்கில் சைக்கிள்கள் நடு வெயிலில் உப்புத்தண்ணி அலை நனைக்க துருப்பிடிக்கக்காத்திருந்தன.

மறு கரை சென்ற மச்சானின் படகு வரும் வரை ஆநிலவனும் உறவினரிகளும் தென்னை மரங்களின் கீழ் காத்திருந்தனர். இதற்கு முன்னர் அவன் வாழ்க்கையில் கண்டிராத தென்னஞ்சோலையை கண்டான். அத்தனை தென்னையும் வட்டு நிறைய குலை தள்ளி வந்திருந்தவர்களின் களைப்பு, பசி நீக்க உதவின.

அவனால் இளநீர் குடிக்க முடியவில்லை. உறவினரின் உரையாடலில் கலந்து கொள்ள முடியவில்லை. கவலை தொண்டையை அடைத்தது. அவன் மனம் தன் தாய்

தந்தையரை விட்டுப்பிரிய இடந்தரவில்லை. இடையிடையே மறைவாக கண்ணீர் சிந்தி அழுதான். அவர்களது படகு வந்ததும் முதலில் பொருட்கள் ஏற்றப்பட்டன. எல்லோரது சைக்கிள்களுடன் அவனதும் அவனின் அண்ணாவினதும் சைக்கிள்களும் ஏற்றப்பட்டன. அண்ணா வலுஉற்சாகமாக காணப்பட்டான். அண்ணா ஓரளவு மூளை வளர்ச்சி குறைந்தவன். அவனை நெறிப்படுத்தி உதவவேண்டும் என்பதற்காகவும் ஆநிலவனையும் பெற்றோர் அனுப்பினர். எல்லோரும் போட்டில் ஏறுவதற்காக கடற்கரையில் உப்புத்தண்ணீர் நனைய நின்றிருந்தனர்.

கடலின் மறுகரையை வெறித்துப்பார்த்தான் அவன். முடிவில்லாத அந்தக்கரையை அடைந்தால் இனி எப்போது இக்கரையை மீளுவோமோ? என சிந்தித்து அவன் கண்கள் பனிக்கத்தொடங்கின. அவன் உறவினர்களிடம் சொன்னான்.

“நான் வரேல்லை திரும்பிப்போப்போறேன் என்ர சைக்கிளை இறக்கித்தாங்கோ”
“டேய் உனக்கு என்ன விசரோ? திரும்பிப்போய் சாகப்போறியோ? உன்ர கொப்பா கொம்மா எங்களை நம்பி அனுப்பி இருக்கினம். பேய்க்கதை கதைக்காமல் போய் போட்டில் ஏறு”

அவன் உறவினர் எல்லோரும் அவனைப்பேசினர். அண்ணனும் இவனிடம் பேசினான்.

“ஏன்ரா அவன் சைக்கிள் எல்லாம் ஏத்தியாச்சு. நீ திரும்பிப்போனால் அப்பா அம்மா பேசுவினம். பேசாமல் வா” இவனால் முடிந்தது இவ்வளவு தான்.

## முடிவு 1

உறவினர்களுடன் கடலில் பயணித்துக்கொண்டிருக்கிறான் ஆநிலவன். பால் குடிக்க தனது பிஞ்சுக்கரங்களால் தாயின் முலையைபிடிக்கும் மழலைக்கு ஏற்படுகின்ற ஏமாற்றம் போல ஆநிலவன் கவலை கொண்டிருந்தான். பலமணி நேரத்தின் பின்னர் மறுகரையில் இறங்கினார்கள். அவனும் அண்ணாவும் ஒரு மாமி குடும்பத்துடன் தங்கி விட்டனர். வரும்போது கொஞ்சக்காசு அவர்களிடம் கொடுத்து விட்டிருந்தார்கள். மூன்று மாதம் அவர்கள் தரும் சாப்பாடு எதுவித புறுபுறுப்பும் இன்றி மருமக்கள் என்ற அன்புடன் இருந்தது.

பின்னர் அண்ணன் செய்யும் குழப்படிகளை பெரிதாக்கி பேசத்தொடங்கி விட்டனர். ஆநிலவனால் இதைப்பொறுத்துக்கொள்ள இயலவில்லை. ஒரு நாள் மூளை வளர்ச்சி குறைந்த அண்ணனை நாவல் மரத்தில் கட்டி வைத்து மூத்த மச்சான் ஒருவன் அடித்தான். உதடு வெடிக்க கை, கால் எங்கும் இரத்தம் வடிய அடித்தபோது இதற்கு மேலும் அங்கு இருக்கப்பிடிக்காமல் அவன் அண்ணனுடன் வெளியேறி விட்டான்.

இன்னொரு உறவினர் வீட்டில் இருந்தனர் என்றாலும் உழைப்பின்றி சாப்பிடப்பிடிக்காமல் அவர்களுக்கு முன்னர் பழக்கமில்லாத வீச்சுத்தொழிலுக்கு போக முடிவு செய்தான். அவன் அப்பா செய்யாத, அப்பப்பா செய்த தொழில். நந்திக்கடலில் வீச்சு, இழுப்புத்தொழில் என சில மாதங்கள் சென்றன. முன்னனுபவம் இல்லாத தொழிலால் நன்றாக மெலிந்து கறுத்துப்போய்விட்டான் ஆநிலவன்.

தான் தொடர்ந்து படிக்கமுடியாததையிட்டு அவன் மிகவும் கவலையடைந்தான். ஊரில் இருக்கும் போது அவன் பாடசாலையில் ஓ.எல் சோதனையில் மிகக்கூடிய பெறு பேறு பெற்று பயோ படித்துக்கொண்டிருந்தான்.

தனது எதிர்கால இலட்சியங்கள் கொள்கைகள் எல்லாம் சுக்குநூறாக உடைந்து விட்டனவா என எண்ணுவான். தனது தந்தை, தாய், சகோதரர்களை நினைத்தும் தான் இங்கு படும் கஷ்டங்களை நினைத்தும் தனது படிப்பு பாழாகியதை நினைத்தும் மணிக்கணக்கில் தனித்திருந்து அழுது கொண்டிருப்பான்.

அவன் போட்ட பல கடிதங்களுக்கு முதன்முறையாக அம்மா பதில் எழுதியிருந்தாள். ஊரில் எங்கும் இராணுவமாம். அடிக்கடி ரவுண்டப் நடக்குதாம். கடைசித்தம்பி தொடக்கம், நடக்கமுடியாத அப்பாவரை ரவுண்டப் போக வேண்டுமாம். பெரிய பண்ட் அடித்திருக்கிறார்களாம். சாப்பிட சாப்பாடில்லையாம். சங்கக்கடையை பண்டுக்குள்ள கொண்டு போட்டாங்களாம். ஒரு கிழமைக்கு மூன்று கிலோ அரிசிதானாம் கொடுப்பார்கள். வெளிக்கடையில் அரிசி, மா இரண்டும் வாங்க முடியாதாம். சில நாளையில் கியூவில் நின்று ஒரு றாத்தல் பாண் வாங்கலாமாம். என எழுதியிருந்தாள். வாசிக்க வாசிக்க அவன் கண்ணீர் கடிதத்தில் வழுந்து கடதாசியை நனைத்தது. உடம்பைக்கவனமாய் பார்த்துக்கொள்ளும் படியும் அண்ணாவை குழப்படி செய்யாமல்

இருக்கச்சொல்லும்படியும் ஆரும் அதிபர்களிடம் அப்பாவின் பெயரைச்சொல்லி பள்ளிக்கூடத்தில் சேர்ந்து ஏ.எல் சோதினை எடுக்கும் படியும் அப்பாவின் சம்பளம் வர காசு அனுப்பிறதாயும் எழுதியிருந்தாள்.

ஆநிலவனின் அப்பா முந்தி ஏழு வருஷம் கிளாக்காக இருந்தவர். அப்பாவின் செல்வாக்கால் ஒரு பள்ளிக்கூடத்தில் ஏ.எல் வகுப்பில் சேர முடிந்தது. காலையில் பள்ளிக்கூடம் போவது, மாலை, இரவில் தொழிலுக்கு செல்வது என சிறிது காலம் சென்றது.

இதற்கிடையில் சின்னண்ணாவின் குழப்படிகள் கூடிக்கொண்டு வந்தன. ஒரு நாள் தனது சைக்கிளை எங்கோ தொலைத்து விட்டு வந்தார். இன்னொருநாள் அவனது சைக்கிளை யாருக்கோ விற்றுவிட்டு வந்தார். இதனால் அவன் பள்ளிக்கூடம், தொழில் போவது எல்லாம் கஷடமாக இருந்தது. ஒரு நாள் சின்னண்ணாவுடன் பேசுப்பட்டு சண்டையிட்டான். அவர் கோபித்துக்கொண்டு எங்கோ காணாமல் போய்விட்டார். பல இடங்களில் தேடினான். கண்டுபிடிக்க முடியவில்லை. சிலரிடம் விசாரித்தபோது அவர் அங்கே நின்றார். இங்கே நின்றார். என்றனர். அவனும் எங்கெல்லாமோ அலைந்தான். கவலைதான் அதிகமானது பலன் ஏதுமில்லை. அலைந்த அவனை வன்னி மண்ணுக்கே உரிய சிறப்பான காய்ச்சல் பிடித்துக்கொண்டது.

மல்லாவி ஆஸ்பத்திரி வாட்டில் போய் படுத்துக்கொண்டான். பராமரிக்க எவருமில்லை. உறவினர்கள் சிலர் ஓரிருநாள் வந்து பார்த்துப் போயினர். நாட்கள் மாதமாகியும் காய்ச்சல் விடவில்லை. ஐ.சி.ஆர்.சி. மூலம் வவுனியா ஆஸ்பத்திரிக்கு அனுப்ப முடிவெடுத்தது ஆஸ்பத்திரி நிர்வாகம். இத்தனைக்கும் இடையில் அன்று ஒரு சந்தோசமான சந்திப்பு நிகழ்ந்தது.

அவனது போராளியான மூத்த அண்ணா கேள்விப்பட்டு வந்து பார்த்தார். அவனைப்பார்த்து அழுதே விட்டார். அவனும் அழுதான். காணாமல் போன சின்னண்ணாவும் "தம்பிக்கு காய்ச்சல், வாட்டில் இருக்கிறான்" என கேள்விப்பட்டு நாலைந்து தோடம்பழங்களும், றஸ்கும் வாங்கிக்கொண்டு வந்தார்.

இந்தப்பூரிப்பிலேயே அவன் மரித்துப்போனான். அனாதை ஆகாமல் அண்ணன்மார்கள் இருக்கிறார்கள் என்ற சந்தோசத்திலேயே அவன் இறந்து போனான்.

## முடிவு 2

கிளாலிக்கரையில் அவனுக்கும் உறவினர்களுக்கும் நடந்த வாய்த்தர்க்கத்தில் அவனது பிடிவாதமே வென்றது.

"விருப்பமில்லாதவனை அங்கை கூட்டிக்கொண்டுபோய் பேந்தும் எங்களுக்குத்தான் கரைச்சல். இவன்ர சைக்கிளை இறக்கிக்குடுங்கோ. அவன் போகட்டும். " என போட்கார மச்சான் சொல்ல அவன் புறப்பட்டு விட்டான் வீடு நோக்கி. அவனுக்கு வீடு போக வழி தெரியாது. இடம்பெயர்ந்து வரும் சனங்கள் வாற திசைக்கு எதிராக சைக்கிளை உழக்கினான். சந்தியை கவனித்தான். ஒரு பாதையால் வரும் மக்களில் அரைவாசிப்பேர் கிழக்குத்திசை நோக்கியும், அரைவாசிப்பேர் மேற்குத்திசை நோக்கியும் செல்வதை அவதானித்தான். கிழக்கே போகிறவர்கள் கிளாலி நோக்கிபோகின்றனர். அப்படியாயின் மேற்கே போகிறவர்கள் எங்கே செல்கின்றனர். வலிகாமத்தை சேர்ந்தவர்கள் வடமராட்சி, தென்மராட்சியிலிருந்து தமது வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். அவன் ஒருவன்தான் எதிர்த்திசை நோக்கி சென்றுகொண்டிருந்தான். வீடு வந்ததும் எதிர்பார்த்த அளவு அப்பா, அம்மா பேசவில்லை.

சில நாட்களில் பள்ளிக்கூடம் மீளத்தொடங்கியது. சுற்றிவளைப்புக்கள் நடந்தன. தலையாட்டிகள் முன் வரிசையாக விடப்பட்டோம். சிலர் தலையாட்டப்பட்டனர். பின்னர் அவர்கள் காணாமல் போயினர். ஊரில் சனங்கள் மிகக்குறைவு. ஒரு வீட்டில் ஆட்கள் இருந்தால் பேந்து பத்து வீடுகள் தள்ளித்தான் சனம் உள்ள வீடு. ஒரு நாள் உறவினர் ஒருவர் செத்து விட்டார். சுடலைக்கு சவம் கொண்டுபோய் எரிக்க ஆளில்லை. அவனும் நாலைந்து பேருடன் முதன் முதலாக சுடலை சென்று சவம் எரித்துவிட்டு வந்தான். அன்றிலிருந்து அவனுக்கு பொக்குளிப்பான் போட்டுவிட்டது.

வல்லை தொடக்கம் நாகர் கோயில் வரை ராணுவம் நீளமான பண்ட்

அடித்திருந்தது. இடையில் வீடுகள் கடைகள் எது எதிர்ப்பட்டாலும் உடைத்துக்குவிக்கப்பட்டது. அடிக்கொரு தடவை பனங்குற்றியால் சென்றிகள். அவன் பல தடவை பண்ட் மூடியதால் ரயூசனுக்கு செல்லமுடியாமல் திரும்பியிருக்கிறான். இப்படியான பல தடவைகள் கஷ்டங்கள் மத்தியில் படித்து முதலாம் தடவை ஏ.எல் எடுத்தான். பல்கலைக்கழகம் போக காணாது. வலை பின்ன பலதடவை எத்தனிக்கும் சிலந்தி போன்று விடாது படித்து இரண்டாம் தடவை பரீட்சை எழுதினான். இதற்கிடையில் கிளறிக்கல் சோதனையும் எழுதியிருந்தான். இரண்டு முடிவுகளும் வந்தன். ஏ.எல் றிசல்ட் கம்பஸ் செல்ல இந்த முறையும் காணாது. ஆனாலும் எழுதுவினைஞர் பரீட்சையில் சித்தியெய்தி இப்பொழுது ஒரு இளம் எழுதுவினைஞனாக வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

அவன் என்ன முடிவு எடுத்தான்? கிளாளிக்கரையை கடந்தானா?அல்லது கடக்கவில்லையா? அவன் செத்துப்போனானா? அல்லது உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கிறானா? இதை எழுதியது மனிதனா இல்லை கல்லறையா? கல்லறைகளும் கதைகள் சொல்லுமா? நிச்சயமாக சொல்லும். நிஜ மனிதனைக்காட்டிலும் வீரியமான உணர்வுகள் புதைந்திருப்பது கல்லறைகளில் தான். ■

*(ஞாயிறு தினக்குரல் 22.10.2002)*

# ஒரு பேனாவின் கண்ணீர் வரைந்த கவிதை

சிறுகதை 2



நிலா இப்பொழுது எங்கள் அழகிய தீவின் உச்சியின் உலக முடிவில் (World End) நின்று கொண்டிருக்கிறாள். வெண் பஞ்சு முகில்கள் அவள் மேனிதனை தழுவிச்சென்று கொண்டிருந்தன. அவை காவிவந்த பனித்துளிகள் உடலில் ஒட்டிக்கொள்ள மெய்மறந்து இலயித்து நிற்கிறாள். தனது இரு கைகளை விரித்தபடி கண்களை மூடி தன்னை மறந்து இயற்கையுடன் ஒன்றித்து விடுகிறாள்.

"நிலா" என்று செல்லமாக அழைக்கப்படும் "வெண்ணிலா" பார்ப்பவரை வசீகரிக்கும் வதனம் கொண்ட வனிதை. சைவத்தமிழ் பாரம்பரியம் கொண்ட குலத்தில் உதித்த குடும்பப்பாங்கான குமுதம். உள்ளத்தில் பல புரட்சிக்கருத்துக்கள் கொண்டவள். பல்கலைக்கழகத்தில் உயிரியல் விஞ்ஞான மாணவி.

இப்பொழுது அவள் உணர்வுகள் கவிதை வரையத்தொடங்கியது.

"பூமித்தாயே நீயும் பெண்!, நானும் பெண்!
பொறுமைக்கு நீ இலக்கணமம்மா,
அழகுக்கு நீ அரசியம்மா,
உந்தன் அழகின்சிகரத்தை நான் ரசித்தேனம்மா,
அதனால் பூரித்துப்போனேன் தாயே!"

"அம்மா தாயே பகல் கனவு கண்டது போதும் வா? எல்லோரும் இறங்குகினம் மிஸ் பேசப்போறா, கெதியாய் இறங்குவோம்." என நண்பிகள் சொன்னபோதுதான் சுய நினைவுக்கு திரும்பிய நிலா, நண்பிகளுடன் மலையில் இருந்து இறங்கத்தொடங்கினாள்.

நிலா யாழ்ப்பாணத்தில் ஒரு கரையோரக்கிராமத்தினை சேர்ந்தவள். அவள் பல்கலைக்கழக மாணவர்களுடன் சுற்றுலாவிற்காக வந்திருக்கிறாள்.

அண்மைக்காலத்தில், யாழ்ப்பாணத்தில் பல சொகுசு பஸ்களை நிலாவினால் காண முடிகிறது. அவற்றில் வரும் சிங்கள அன்பர்களும், முஸ்லீம் சகோதரர்களும் யாழ்ப்பாணத்து புனிதத்தலங்களையும், தாம் முன்னர் வாழ்ந்த இடங்களையும் பார்த்துப்போகின்றனர். ஆரிய குளம் சந்தியிலுள்ள புத்த விகாரையை சூழ எப்பொழுதும் ஐந்து அல்லது ஆறிற்கு குறையாத பஸ்களையும், அவற்றினை சூழ பயணிகளையும் கண்டிருக்கிறாள். விகாரையில் பிரித் ஓதுதலையும், யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளிவாசலில் பாங்கு ஓசையையும் கேட்க முடிகிறது. அவர்கள் வட பகுதிக்கும், நாங்கள் தென்பகுதிக்கும் சுதந்திரமாக பயணிக்கிறோம் என்றால், இந்நாட்டு மனிதர்கள் மனதில் மலர்ந்திருக்கும் புரிந்துணர்வு சமாதானம் என்பவற்றினை எமக்களித்த இறைவனுக்கு மனதால் நன்றி கூறினாள். அவள் மனது கவிதை சொன்னது.

"விழி மூடி கரம் கூப்பி வேண்டுகின்றேன்.
விரைந்து வரவேண்டும் தேவதையே!
சமாதான தேவதையே!
எமது வாயில்களை அகலத்திறந்து வைத்துள்ளோம்.
அடி பதித்து ஆட்சி செய்யவேண்டும் எமை நீ!
நாம் அனைவரும் இணைந்து போராடத்தயார்.
"போர்" எனும் அரக்கனுக்கு எதிராக "ஒலிவ்" இலை வாங்கிய வெண்புறாக்களை
எம் தீவு எங்கும் பறக்க விடுவோம்."

பஸ் இப்பொழுது கதிர்காமத்தினை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறது. பஸ் முழுவதும் பாட்டும் கூத்தும் கோலோச்சிக்கொண்டிருந்தது. "இவங்கள் (Boys) எல்லோரும் ஐஞ்சு ஆறு நாளாய் நித்திரையும் கொள்ளாம எப்பிடி பகல் இரவாய் ஆடிக்கொண்டிருக்கிறாங்கள்? இவங்களுக்கு களைப்பே இல்லையா? கிருத்திகா தனது பக்கத்தில் இருந்த நிலாவிடம் சொன்னாள். ஆனால் நிலாவிற்கு கிருத்திகா சொன்னது கேட்டதாக தெரியவில்லை. அவள் ஏதோ பலமான சிந்தனை வயப்பட்டவளாக இருந்தாள். கிருத்திகா இரண்டு மூன்று தடவை தட்டிய பின்புதான் சுய நினைவுக்கு வந்தாள்.

"என்னடி உனக்கு என்னாச்சு? காட்டுப்பாதையால் போறம் நீ வேற யன்னல் கரையாய் இருக்கிறாய் பேய் கீய் ஏதும் பிடிச்சுப்போட்டுதா?" என நகைச்சுவையாகக்கேட்டாள் கிருத்திகா. அவளே தொடர்ந்தாள். "என்ன தாயே பஸ்ஸிற்கு வெளியே இருந்த பேய் பிடிச்சதா? அல்லது உன்னைப்பிடிச்ச.. sorry, sorry உனக்கு பிடிச்சபே பஸ்சுக்குள்ள தான் இருக்கா?"

"ஏய் கொஞ்ச நேரம் சும்மா இருக்க விடு அச்சாப்பிள்ளை" நிலா சொன்னாள்.

"நீ உன்ர அழகான பேயைப்பற்றி கனவு காணேக்க நான் குழப்பேல்லையடியம்மா" என்று சொன்ன கிருத்திகா அமைதியாகி விட்டாள்.

கிருத்திகா சொன்னதில் உண்மை இல்லாமலில்லை. "காதல்" என்ற உணர்வை பிறர் சொல்லக்கேள்ளிப்பட்டிருக்கிறாள். திரைப்படங்களில் பார்த்திருக்கிறாள். சிறுகதை, கவிதை, நாவல்களில் படித்திருக்கிறாள். சொந்தமாக அனுபவித்ததில்லை. இப்பொழுது அந்தப்புதிய உணர்வு தன்னை ஆட்கொள்வதை உணர்ந்தாள்.

"றொபேட்" பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பீட மூன்றாம் வருட மாணவப்பிரதிநிதி. இச்சுற்றுலாவிற்கான மாணவ இணைப்பாளரும் (Student Co-ordinator) அவனே. அவன் பொறுப்பாக வந்த மாணவர்களுடன் இணைந்து மாணவர்களை அன்பாக நெறிப்படுத்தி அனைவரதும் பாராட்டைப்பெற்றுவருகிறான். தான் ரூரில் அனுபவிப்பதை தவிர்த்து தன் குழாமிற்கு உதவுவதில் தன் நேரத்தினை கழித்து வருவதால் மாணவியர் மத்தியிலும் றொபட்டிற்கு நல்ல பெயர். அவன் நிலாவுடனும் அன்பாகப்பழகினான். நிலாவிற்கு சுற்றுலாவிற்கு முன் றொபட்டுடன் பெரிதாகப்பழக்கமில்லை. ரூரில் ஒன்றாக உணவருந்தினர். அருகருகே நின்று போட்டோ எடுத்துக்கொண்டனர். ரம்பொடை ஆஞ்சநேயர் கோயிலில் தான் அது நிகழ்ந்தது. அவன் ஒரு கிறிஸ்தவனாக இருந்தும் பிறமதத்தினை மதிக்கும் புனிதன். கால் கழுவி ஆஞ்சநேயர் தரிசனம் செய்தான். குங்குமத்திலகமிட்டுக்கொண்டான். தேங்காய் உடைத்த கையுடன் தன் காதலையும் நிலாவிடம் போட்டுடைத்தான். தேங்காய் வட்டமாய் தான் உடைந்தது. நிலா தான் திணறிப்போனாள். முடிவு பற்றி சிந்திக்க கால அவகாசம் கேட்பதைத்தவிர வேறோன்றும் அவளால் சொல்ல முடியவில்லை.

அதைப்பற்றி சிந்தித்தபடியே அவள் பயணித்துக்கொண்டிருக்கிறாள். அவனைப்பற்றி அலசினாள். அவன் குணவியல்புகளை நீதித்தராசில் இட்டுப்பார்த்து சிந்தித்தாள். விளைவு நிலாவும் காதல் எனும் கடலில் மூழ்கிப்போனாள். அவள் மனது என்னும் கீ போர்ட்டில் சிந்தனைகள் நர்த்தனமிட, அவள் வதனம் எனும் மொனிட்டரில் காதல் கவிதைகள் மலரத்தொடங்கின.

"காதல் எனும் உணர்வால் என் கருங்கல் நெஞ்சம் உருகிப்போனது.
இதயத்தில் ஆயிரம் பட்டாம்பூச்சிகள் பறக்கின்றன;
காதல் எனும் தேன் ஊற்றால்.
காதலிற்கு இனம், மொழி, மதம் ஒன்றும் தடையில்லை,
தூய அன்பு மட்டும் போதுமானது.
உலக முடிவென்ன
எவரெஸ்றறும் என்றாலும் என்னால் ஏறமுடியும்.
எனதருமைக்காதலன் என்னருகில் இருக்கும் வரை.
அனுமனே!
இராமனையும் சீதையையும் சேர்த்து வைத்ததுடன்
உனது பணி முடியவில்லை.
இந்த நிலாவையும் றொபட்டையும் சேர்ப்பதும் உனது கடைமை.
உனது சந்நிதியில் எமது காதல் மலரவேண்டும் என்பது நியதி என்றால்
மரணத்திலும் எம்மை இணைத்துவிடு.

பஸ் கதிர்காமத்தினை மதியமளவில் சென்றடைந்தது. மாணிக்க கங்கையில் மாணவர்கள் ஸ்நானம் செய்து கோயிலைக்கும்பிட்டனர். அங்கே தெய்வானை சந்நிதியின் முன்னால் எரிந்துகொண்டிருந்த கற்பூர தீபத்தினை இரண்டு சோடிக்கைகள் தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்டிருந்தன. அக்கைகளுக்கு சொந்தமானவர்கள் வேறு யாருமல்லர். றொபட்டும் நிலாவும்தான்.


திட்டமிட்டபடி கதிர்காமத்திலிருந்து கரையோரமாக கொழும்பு நோக்கி பஸ் ஓடிக்கொண்டிருந்தது. பஸ்ஸின் முன்னால் கட்டப்பட்டிருந்த பதாதையில் பல்கலைக்கழக பெயரையும் யாழ்ப்பாணத்தையும் பார்த்தவர்கள் அனைவரது முகத்திலும் ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சி கொப்பளித்தது. அன்பாக தமது கைகளை அசைத்து எம்மை வரவேற்றனர்.

சுற்றுலாவின் நிறைவு நாள். பஸ் யாழ்ப்பாணம் நோக்கி புறப்படும் நாள். எல்லோரும் களைத்து விட்டிருந்தனர். அத்துடன் அவர்களை கவலையும் தொற்றிக்கொண்டது. பஸ் இரவு பத்து மணியளவில் புறப்பட்டு விட்டது. பஸ் புத்தளத்தினை அடைந்த போதுதான் அந்தப் படுபயங்கரம் நிகழ்ந்தது. ஆளில்லாத புகையிரதக்கடவையை பஸ் கடக்கையில் பின்புறமாக நகர்ந்து கொண்டிருந்த பஸ்சுடன் மோதி ரயிலால் இழுத்துச்செல்லப்பட்டது. பஸ் அப்பளமாக நொருங்கியது. எட்டுத்திசை எங்கும் அவலக்குரல் எதிரொலித்தது.

குறிப்பிட்ட தூரத்தில் ரயில் நின்ற பிறகுதான் பயணிகள் மீட்கப்பட்டனர். அவ்வூர் மக்கள் சிங்களவர், முஸ்லீமாக இருந்தாலும் இனப்பாகுபாடு காட்டாது பஸ்ஸில் பயணித்தோரை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்த்தனர். பலர் படுகாயமடைந்தனர். றொபட்டும் காயமடைந்தான். மூவர் இவ்வுலகை விட்டு பிரிந்தனர். அவர்களில் நிலா என்ற பூவும் மரணித்துப்போனது. அவளது டையரி புகையிரதப்பாதையில் அநாதரவாக வீசப்பட்டுக்கிடக்கிறது. வேகமாய் வீசும் காற்று ஒவ்வொரு தாளாக வாசிக்கிறது. அவள் “பேனா” டயறி நோக்கி நகர்ந்து இறுதிப்பக்கத்தில் கண்ணீர் சிந்தத்தொடங்கியது.

“இவ்வளவு நாள் என்னை நீ இயக்கினாய்.
இன்று நான் உனககாய் கண்ணீர் வடிக்கிறேன்.
நீ ஒரு கவிதையில் சொன்னாய்
நல்லவர்கள் விரைவாய்
மரணித்துப்போகிறார்கள் என்று.
உனக்கு இயற்கையை ரசிக்கத்தெரிந்திருக்கிறது.
நீ சமாதானத்திற்காய் பிரார்த்தித்து இருக்கிறாய்.
தூய காதல் எனும் உணர்வில் மூழ்கி இருக்கிறாய்.
இவ்வளவும் போதும் நீ இவ்வுலகில் வாழ்வதற்கு.
ஆனால் உன்னால் மரணத்தினை வெல்ல முடியவில்லை.
நான் உன்னை குறை கூற மாட்டேன்.
ஏனென்றால் நீ என் எஜமானி.
கவிதையின் தாய்.
நான் சொல்வேன்.
இப்பொழுது கடவுள்களுக்குத்தான்
கண்ணில்லாமல் போய்விட்டது” ■

***(வலம்புரி – சங்குநாதம், இலங்கை வானொலி யாழ். சேவை)***
***பேராதனைப்பல்கலைக்கழக இலக்கியப்பேரவையின்***
***சாகித்திய விழா 2002ல் முதலாம் பரிசு பெற்ற சிறுகதை***




மாணவ சாகித்திய விழா
STUDENTS FESTIVAL OF LITERATURE
2002

சிறுகதை 3

# எங்கும் இருக்கும் மனிதம்.



இப்பொழுதெல்லாம் வாழ்க்கையில் சில சந்தர்ப்பங்களில் மனதில் விரக்தியும் எதிர்காலத்தில் நம்பிக்கையீனமும் ஏற்படுவது சகஜமானதாகிவிட்டது. இதை இப்பொழுது நான் நினைக்க காரணம் எனது பல்கலைக்கழக கல்வி எப்போது முடிவது. நான் வேலை ஒன்றினைப் பெற்று எப்போது உழைக்கத்தொடங்குவது என்பது பற்றியது. பரீட்சை முடிந்து இரண்டு மாதங்களாகியும் மூடப்பட்ட பல்கலைக்கழகம் இன்னும் மீளத்தொடங்கவில்லை. ஊழியர் பகிஸ்கரிப்புப்போராட்டம், அதனைத்தொடர்ந்து ஆசிரியர் பகிஸ்கரிப்பு போராட்டம் என மாறி மாறி மூடுவிழாக்கள் தான். மாணவர் நலன்கள் மூன்றாம் நிலைக்கு புறம் தள்ளப்பட்டதை நினைக்கும் போது மனம் அடிக்கடி கொந்தளிக்கும். அண்மைக்காலங்களில் எமது நாட்டில் உயர் கல்விக்கு சாவு மணி அடிக்கும் நிகழ்வுகள் தான் பல்கலைக்கழகங்களில் நடந்து கொண்டிருக்கின்றன.

இத்தனையும் நான் இரவு பத்து மணிக்கு பலாலி றோட்டில் சைக்கிள் உழக்கியபடி சிந்தித்துக்கொண்டிருந்தவை. பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் கிரிக்கட் மச் பார்த்து விட்டு நான் தங்கியிருக்கும் ரூமிற்கு திரும்பிக்கொண்டிருந்தேன். இந்திய அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ரீவிஎஸ் கிண்ண இறுதியாட்டம். மச் இன்னும் முடியவில்லை. விறுவிறுப்பான கட்டத்தினை எட்டியிருந்தது. செக்கிருட்டி காட் வந்து தம்பியவை பத்து மணியாகுது என்று சொல்லி புத்திசாதுரியமாக விரட்டினார். எனக்கும் சிறிது பயம் தான். வீதியில் நிற்கும் இராணுவத்துக்கு நான் பயப்படவில்லை. ரூம்கார அங்கிள் வெளிக்கேற்றினை பூட்டியிருப்பார். அவரின் நச்சிரிப்பு வார்த்தைகளுக்கிடையில் அவரைக்கூப்பிட்டு கதவைத்திறக்க வேண்டும் என்பதை நினைக்கத்தான் வெறுப்பாக இருந்தது. இருந்தாலும் நேற்றய குடாநாட்டு நிலவரம் சரியில்லை. பட்டப்பகலில் பஸ் ஸ்ராண்டில் ராணுவம் இருவரை சுட்டுக்காயப்

படுத்தியிருந்தது.

பழம்றோட் கெற்றப்போல் சந்தியில் பியசேன, (இராணுவ வீரன்) இரவுக்கடமையில் நின்றுகொண்டிருப்பது றோட்டில் போன இராணுவடிரக் ஒன்றின் வெளிச்சத்தில் தெரிந்தது. மூன்று வருட பல்கலைக்கழக வாழ்க்கையில் பழகிப்போனவர்களில் பியசேனவும் ஒருத்தன். இதே வீதியால் ஒரு நாளில் பலதடவை செல்லும்போது பார்த்து சிரித்த, ஓரிரு வார்த்தைகள் பேசிய பழக்கம்தான்.

இதனை விட அவனை நான் எனது வாழ்வில் மறக்கமுடியாத அளவிற்கு எனக்கொரு அனுபவம் உண்டு. யுத்தமேகம் குடாநாட்டை மையம் கொண்டிருந்த அந்த இருண்ட பொழுதுகளில் ஒருநாள் மூடப்பட்டிருந்த பல்கலைக்கழகம் மீளத்தொடங்கும் மாணவர் கூட்டத்துக்கு வீட்டில் இருந்து பஸ்ஸில் வந்து கல்வியங்காட்டில் இறங்கி கால்நடையாக பல்கலைக்கழக பின் வாயிலால் வளாகத்துக்கு சென்றேன்.

அப்பொழுது பல்கலைக்கழக முன்வாயில் யாழ். மாநகரசபை எல்லைக்குள் வருவதால் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது. நான் நடந்துவரும்போது தபால் பெட்டிச்சந்திக்கருகில் நின்றிருந்த இராணுவ வீரன் என்னை அழைத்தான். யுத்தம், பயம், கோபம், விரக்தி என்பன அவன் முகத்தில் தெரிந்தன. எனது அடையாள அட்டையை காட்டுமாறு கூறினான். விசாரணையால் என்னைத்துளைத்தான். விசாரணைகளிடையே "சரி போகலாம்" என்று சொன்னதாக எனக்குப்பட்டது.

நானும் எனது பிற்பொக்கட்டில் பத்திரமாக இருந்த அடையாள அட்டையை மீண்டும் வைக்க ஆயத்தமானேன்.

அப்போது அவனது முரட்டுக்கைகள் எனது இரண்டு கன்னங்களையும் பதம் பார்த்தன. எதையும் அறியாத நான் திணறிப்போனேன். வீதியால் போய்வருவோர் இதனைப்பார்த்தும் எதுவும் தெரியாதவர்கள் போல் சென்றார்கள்.

அப்படி மிகவும் இறுக்கமான சூழ்நிலை. அவன் மிகவும் கடுமையான வார்த்தைகளால் என்னை திட்டினான். பின்னர்தான் விளங்கியது அடையாள அட்டையை காட்டாததால்தான் அடித்தான் என்று. அவன் அன்று என்னை போகவிட்டது இறைவன் செயல்தான். அன்றில் இருந்து, எந்த விசயத்திலும் இரண்டு பக்கமும் சிந்தித்துப்பார்க்கும் நான், மனதால் மட்டுமல்ல உடலாலும் மென்மையான எனக்கு

இராணுவம் என்றாலே பிடிக்காத பிறவிகளாக மாறிப்போனது. அந்த இராணுவ வீரன் இந்த பியசேனதான்.

பின்னர் இந்த பியசேனவை பல்கலைக்கழகத்தினை சூழவுள்ள ஏதாவதொரு செக் பொயின்ரில் காண்பேன். அல்லது வாராந்தம் நடக்கும் சுற்றிவளைப்பில் காண்பேன்.

நான் அவனைக்காணும்போதெல்லாம் எனது மனம் கோபத்தினை காட்டினாலும் முகத்தில் காட்டமுடியாது. அப்படிக்காட்டினால் காணாமல் போவோர் பட்டியலில் இடம்பெற நேரிடும் அல்லது ஏதாவதொரு சந்தியில் சுடப்பட்டு சடலமாக வேண்டியிருக்கும் என்ற பயம் தான்.

போரில் ஈடுபடுபவர்களிற்கிடையில் புரிந்துணர்வு ஏற்பட்டு யுத்தநிறுத்தம் ஏற்பட்ட பின்னர் பியசேனவுடன் சில வார்த்தைகள் அன்பாக பேசியதுண்டு. இந்த சிநேகிதத்தில் அவனுக்கு சிலசமயம் ரவுணில் உள்ள ஹட்டன் நசனல் வங்கியில் அவனது கணக்கில் காட் போட்டு பணம் எடுத்துக்கொடுத்ததுண்டு. அவர்களது வாழ்க்கையும் பரிதாபம் தான். பாங்கில் பணம் எடுக்கக்கூட முடியாத நிலை. அந்த சென்றியே அவர்களது வாழ்விடம். கடைசியாக போனகிழமை தனது கணக்கில் ஆயிரம் ரூபா எடுத்து வருமாறு கூறி தனது காட்டினை தந்து விட்டிருந்தான். அனால் அவனது கணக்கில் ஐநூறு ரூபா மட்டுமே எடுக்கக்கூடியதாக இருந்தது. எடுத்து வந்து கொடுத்தேன்.

நான் பலாலி றோட்டில் திரும்பி எனதுறூம் இருக்கும் மணல்தறை லேனில் திரும்பும்போது "அடோ" என்ற சத்தம் கேட்டது. நான் திரும்பிப்பார்த்தேன். அந்த இராணுவ வீரன் பியசேன என்னை அழைத்தான். அவன் முகத்தினை பார்த்தேன். பயம், கோபம், வெறுப்பு, ஆவேசம் கலந்த வெறித்த பார்வை முன்னர் என்னை தபால் பெட்டிச்சந்தியில் வைத்து அறைந்த அவனை அந்தக்கணத்தில் பார்த்தேன்.

"எங்கே போய் வாறாய்?"

"கடையில சாப்பாடு எடுத்துக்கொண்டு வாறன்." பொய் சொன்னேன்.

"இப்ப என்ன நேரம் ஆகுது?"

"பத்தரை"

"இப்படியான நேரங்களில் திரியக்கூடாது என்று உனக்கு தெரியாதா?"

"இப்பதான் இரவில் ஊரடங்கு எல்லாம் இல்லையே" என சொல்ல நினைத்தேன். ஆனால் சொல்லவில்லை.

"எப்போதும் நிலைமை ஒரே மாதிரி இருக்கும் என்று நினைக்காதே! நாங்களும் அப்படியிருக்க மாட்டோம். நாங்கள் நினைத்தாலும் உயரதிகாரிகள் விடமாட்டார்கள். பாதுகாப்பு அமைச்சு இப்ப பிரதமரிட்ட இருந்து ஜனாதிபதி எடுத்திட்டா. அவர்கள் சொல்வதைத்தான் நாங்கள் செய்ய முடியும். இப்ப என்ர விரல்களைப்பார். எந்தக்கணத்திலும் துப்பாக்கி விசையை தட்டலாம். சிலசமயம் என்ர கட்டுப்பாடில்லாமலும் வெடிக்கலாம்."

"நீ நேற்று யாழ்ப்பாணம் ரவுணில் நடந்ததை கேள்விப்பட்டாயா?"

"ஓம்"

"அது தெரிந்துமா நீஇப்படித்திரியிறாய். நான் உன்னைப்பயப்படுத்த இதைச்சொல்லவில்லை. உன் நன்மைக்குத்தான் சொல்கிறேன்."

அவனே தொடர்ந்தான்.

"உனக்கு ஒரு நாள் கன்னத்தில் அறைந்ததை ஞாபகம் வைத்திருக்கிறாயா?"

"ஓம்" நான் பவ்வியமாக சென்னேன்"

"அதன் பின்னர் உன்னைக்காணும் போதெல்லாம் நான் அதையிட்டு கவலையடைவதுண்டு. நீ ஒரு அப்பாவியாய் இருக்கிறாய். உன்னை நான் என் சகோதரனாய்த்தான் கருதுகிறேன். உனது நன்மைக்குத்தான் சொல்கிறேன். சரி நீ போ" என்றான்.

நான் றூமிற்கு வந்ததும் அவனைப்பற்றியும் இன்னைய நிகழ்வுகள் பற்றியும் சந்தித்துப்பார்த்தேன். படுத்தும் நீண்டநேரமாக நித்திரை வரவில்லை. ■

***(வீரகேசரி வார வெளியீடு, 11.01.2004)***

சிறுகதை 4

# பதில் கடிதம்



படம் : இணையம்

ஓங்கி வளர்ந்த மூங்கில் மரங்களினூடு தெரியும் மகாவலி ஆற்று வெள்ளத்தினை வெறித்துப்பார்த்துக்கொண்டிருந்தான் ஆநிலவன். மிதவைகளைப் பயன்படுத்தி சிலர் ஓடும் ஆற்றில் இருந்து மணல் அள்ளிக்கொண்டிருந்தனர். அவன் கையில் தொடர்ச்சியாக சிகரெட்டுக்கள் புகைத்துக்கொண்டிருந்தன. அருகில் பொலித்தின் பை ஒன்றில் சாப்பட்டுப்பார்சல் ஒன்றிருந்தது. பேராதனைப்பூங்காவில் காதலர்களுக்கென ஒதுக்கப்பட்ட பகுதியின் தொங்கலில் உள்ள மரம் ஒன்றின் வேரில் அமர்ந்திருக்கின்றான். எங்கு திரும்பினும் காதல் சோடிகள், தம்மைமறந்து இன்பத்தில் திளைத்திருந்தனர். அவர்கள் எவருக்கும் இடையூறு விளைவிக்கக்கூடாது எனும் எண்ணத்தில், சத்தமிட்டு பாயும் ஆற்று வெள்ளத்தினை பார்த்தபடி இருக்கிறான். இந்த மரத்தின்கீழ் ஏன் ஆநிலவன் வரவேண்டும்.? ஆநிலவனுக்கு இபபோதெல்லாம் சிலவருடங்களாக நன்கு பழக்கப்பட்ட இந்த இடத்திற்கு வரும்போதுதான் மனதிற்கு ஓரளவிற்கேனும் நிம்மதி கிடைக்கிறது.

பல்கலைக்கழக வாழ்க்கைதந்த உறவுதான் ஆர்த்தி. ஆநிலவனும் ஆர்த்தியும் பெயர்தெரியாத இந்த பிரமாண்டமான மரத்தின்கீழ் இருக்கும்போது பெற்ற சந்தோசம் வாழ்க்கையில் முன் எப்போதும் பெற்றிருக்கமாட்டார்கள். இனியும் பெறப்போவதில்லை. அந்த இன்பம் ஸ்பரிசத்தால் வந்ததல்ல. உள்ளங்கள் சங்கமித்த உண்மையான காதலினால் உருவானது. அவர்களது தூயகாதல் அழியவுமில்லை. பெற்றோர்

எதிர்ப்பையும் மீறி அவர்கள் திருமணம் செய்துகொண்டனர்.

ஆநிலவனின் பொறியியல் பட்டம் பெற்றும் என்னபயன். இலங்கையில் வேலை எடுப்பது என்பது குதிரைக்கொம்பாகிவிட்ட காலம் இது. சிங்கப்பூரில் வேலை செய்துவிட்டு சென்ற மாதம்தான் வந்திருந்தான். பெறியியலாளன் ஆநிலவனுக்கும் டொக்ரர் ஆர்த்திக்கும் மிகச்சிறப்பாக திருமணம் நடைபெற்றது.

தனிச்சொந்தவீட்டில் ஆர்த்தியும் ஆநிலவனும் மணவாழ்க்கையை தொடங்கினார். அன்று இரவு ஆநிலவனுக்கு சரியான தலையிடியும், காய்ச்சலுமாக இருந்தது. திடிரென்று இரத்தமாக சத்தி எடுத்தான். ஆர்த்தியால் அவள் கணவனுக்கு வைத்தியம் பார்க்கமுடியவில்லை. அவள் கணவன் நிலைகண்டு மயங்கிப்போனாள். உடனடியாக பிரபல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயர்தர சிகிச்சை வழங்கப்பட்டது. ஆநிலவன் சிங்கப்பூரில் இரண்டு வருடம் இருந்தமையால் "சார்ஸ்" இருக்குமோ என எல்லோரும் பயந்தனர். ஆனால் இரண்டு நாடகளில் ஆநிலவன் பூரண சுகம் பெற்று வீடு திரும்பினான். வைத்தியசாலை வைத்திய நிபுணருடன் உரையாடியதில் எதுவித பிரச்சனையும் இல்லை எனக்கூறினார். சில பிளட்றிப்போட் அடுத்தகிழமை பார்க்கலாம் எனக்கூறி அனுப்பிவிட்டார்.

அடுத்தகிழமை ஆர்த்தியும் ஆநிலவனும் வைத்தியசாலை சென்று பிளட்றிப்போட்டைப்பார்த்து இடிந்துபோயினர். ஆம் நிலவனுக்கு "எயிட்ஸ்" பொசிட்டிவ் இருவரும் அமைதியாக வீடுதிரும்பினர். அமைதியே உருவான ஆர்த்தி, வைத்தியரான ஆர்த்தி சாதாரண அபலைப்பெண்ணாய் மாறி அழத்தொடங்கினாள். தன் உயிருக்கும் மேலாக ஆசைவைத்திருந்த காதலன், அன்புக்கணவன் தன்னை ஏமாற்றிவிட்டதாய் சத்தமிட்டு அழுது புலம்பினாள். பின்னர் ஒரு முடிவுக்கு வந்தவளாய் தாம் இருவரும் இதுவரை உடலுறவு கொள்ளாதது ஆண்டவனின் செயல் என்றாள். உடனடியாக பிரிந்துபோக தீர்மானித்தாள். ஆனால் இந்தநோயைப்பற்றி எவரிடமும் கூறப்போவதில்லை என்று கூறியபின் புறப்பட ஆயத்தமானாள். ஆனால் ஆநிலவனால் எதையும் விளங்கிக்கொள்ளமுடியவில்லை. தன்னையே அவனால் விளங்கிக்கொள்ள முடியாமல் எப்படி ஆர்த்தியை ஆற்றுப்படுத்தமுடியும். அன்று இரவு எவரும் எவருடனும் பேசவில்லை.

விடிய ஆநிலவன் கண்டிக்கு புறப்பட்டுவிட்டான். அவன் வேலைசெய்யும் சர்வதேச நிர்மானப்பணி நிறுவனம் மலைநாட்டில் ஒரு வைத்தியசாலை

கட்டிக்கொண்டிருந்தது. இவன் தனது கடமைக்கு திரும்பியவன்தான் மீண்டும் வீடு செல்லவில்லை. நாட்கள் ஒன்று, இரண்டு என ஆறுமாதமாகிவிட்டது.

பல சிக்கலான புதிர்களுக்கே தீர்வுகண்டவனுக்கு இரண்டு புதிர்களுக்குத்தான் இன்னும் விடைதெரியவில்லை. முதலாவது தனக்கு எப்படி எயிட்ஸ் வந்தது? இரண்டாவது இவ்வளவு அன்பாகப்பழகிய, காதலித்த ஆர்த்தி தன்னை புரிந்து கொள்ளாதது ஏப்படி?

இதுவரை எந்த நபரிடமோ பாலியல் உறவு கொண்டதில்லை (இன்னும் மனைவியான ஆர்த்தியுடன் கூட) அப்படியிருக்க எப்படி நிகழ்ந்தது. எயிட்ஸ் தொற்றும் பலவழிகளை அறிந்திருந்தான். வைத்தியசாலைகளில் சிலசமயம் சிகிச்சைக்காக ஊசிபோட்டதுண்டு. சிலசமயம் அதன்வழியாகவோ அல்லது தலைமயிர்வெட்டி சேவ் செய்யும் கடைகளிலோ சிலசமயம் தவறு நிகழ்ந்திருக்கலாம். இதுவும் அவன் அறியாமல் நிகழ்ந்திருக்க சாத்தியம் குறைவு. அப்படியிருக்க அவனை அது தொற்றியது இவன் தலைவிதி.

வீட்டைவிட்டு வந்த சிலநாட்களில் இவற்றினை எல்லாம் விபரமாக ஒரு கடிதத்தில் எழுதி ஆர்த்திக்கு பதிவுத்தபால் செய்திருந்தான். பதிலாக அவளிடமிருந்து ஒரு கடிதத்தில் ஒரு படமும் அதன் கீழ் ஒரு சொல்லும் எழுதியிருந்தால். படம் - மண்டை ஓடு, சொல் - துரோகி, அக்கடிதத்தின்பின் நன்றாக இடிந்துபோனான் ஆநிலவன்.

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக்கொண்ட ஆர்த்திக்கும் ஆநிலவனுக்கும் மிகவும் இக்கட்டான காலகட்டத்தில்தான் பல்கலைக்கழகம் கிடைத்திருந்தது. ஆர்த்திக்கு பேராதனைப்பல்கலைக்கழகம் கிடைத்ததையிட்டு சந்தோசப்படுவதற்கு பதிலாக ஆர்த்தியின் பெற்றோர் கவலைப்பட்டனர். ஏனெனில் அப்படிப்பட்ட போக்குவரத்து முற்றாக மூடப்பட்ட குடாநாடு. மாதம் ஒருமுறை ஆட்களை கொண்டுபோகும் லங்காமுடித்த சரக்குக்கப்பல். பதிவதற்கு கிளியரன்ஸ், பொலிஸ்பதிவு, பாஸ் என கெடுபிடி அதைவிட பொம்பளைப்பிள்ளையை தனியாக அனுப்ப சரியானபயம்.

கப்பலில் ஏறியபின் அறிமுகமானவன்தான் ஆநிலவன். ஆரம்பத்தில் ஒருவர் ஒருவருக்கு செய்த உதவி, ஈற்றில் பல்கலைக்கழகத்தில் காதலில் மலர்ந்தது. அவர்களும் எல்லாக்காதலர்கள் போல் மகிழ்ச்சியாக இருந்தார்கள். ஆனால் என்றும்

எல்லை மீறியதில்லை. பல்கலைக்கழக நான்கு வருடங்களில் பேராதனைப்பூங்காவில் இந்தமரத்தின் வேர்களில் இருந்து எதிர்கால வாழ்க்கை பற்றிய நம்பிக்கையுடன் காதலித்தனார். இன்று அவன் மட்டும் தனிமையில் வாடி நிற்கின்றான். ஒரு இளம் பொறியியலாளன் தனது வாழக்கையை திறம்பட கட்டியெழுப்பமுடியாமல் தாங்கு தூண் இன்றி அழிந்துகொண்டிருக்கின்றான்.

அன்று ஆநிலவன் தனது றூமிற்கு வர இரவு எட்டுமணியாகிவிட்டது. மனம் சரியான பாரமாக இருந்தது. ஞாயிற்றுக்கிழமை என்பதால் நல்ல நிகழ்ச்சி என்னவும் போகும் என ரீவியைப்போட்டான். அவன் கண்களை அவனாலேயே நம்பமுடிய்யவில்லை ரீவியில் ஆர்த்தி தெரிந்தாள். கதிரையை இழத்துப்போடடுக்கொண்டு சத்தத்தை கூட்டிவிட்டான். "திருமதி. ஆர்த்தி ஆநிலவன், இணைப்பாளர், எயிட்ஸ்நோய் தடுப்பு, எயிட்ஸ்நோய் பராமரிப்பாளர் சங்கம்" அவனுக்கு வியப்பாக இருந்தது.

போட்டியாளரின் இறுதிக்கேள்வி "எயிட்ஸ் நோயாளிகள் ஒதுக்கப்பட வேண்டியவர்களா? அல்லது பராமரிக்கப்பட வேண்டியவர்களா?"

ஆர்த்தி "நீங்கள் கேள்வியில் கூட ஒதுக்கப்படவேண்டியவர்கள் என்ற வார்த்தையை பிரயோகிக்கக்கூடாது. அவர்கள் நிச்சயமாக பராமரிக்கப்பட வேண்டியவர்கள். சமூகத்துள், குடும்பத்துள் அவர்கள் மீது எதுவித வேற்றுமையும் காட்டாது வழக்கமாக அவர்களுடன் பழகவேண்டும். அத்துடன் அனைவரும் பாதுகாப்பாக இருக்கவேண்டும். இதைத்தான் முக்கிய தொனிப்பொருளாக கூறவிரும்புகிறேன்" பேட்டி முடிந்தது, உங்கள் மேலதிக கேள்விகளுக்கு விடை எழுதத்தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி,

திருமதி.ஆர்த்தி ஆநிலவன்,

இணைப்பாளர்,

எயிட்ஸ்நோய்தடுப்பு, எயிட்ஸ் நோய் பராமரிப்புச்சங்கம்.

இந்த முகவரிக்கு ஒரு கடிதம் அனுப்புவோமா? என சிந்தித்தான். ஆனால் தனக்கு முன்னர் அனுப்பப்பட்ட கடிதத்தில் படத்தினையும் இதன் கீழுள்ள வாசகத்தையும் நினைத்துப்பார்த்தான். பதில் கடிதம் அனுப்பவில்லை. ■

*(யாவும் கற்பனை)*

*(வீரகேசரி வாரவெளியீடு)*

# நெருப்பை சுமக்கும் இதயங்கள்

சிறுகதை 5



படம் : சுடர் ஒளி

சிவராத்திரி கழிந்து சில நாட்கள் சென்றிருக்கும். பிறை வடிவ சந்திரன் பனை மரங்களிடையே வெள்ளொளியை பரப்பிய வண்ணம் இருந்தான். இரவு ஒன்பது மணி நிசப்தத்தினுள் நான் புகுந்த ஊர் (திருமணம் முடித்த ஊர்) மூழ்கி இருந்தது. நான் வீட்டு தலைவாசலின் முன்னால், விலாட்டு மரத்தின் கீழ் உள்ள மண்ணில் இருக்கிறேன். விலாட்டு மரம் என்றதும் தேன் சொட்டும் மாம்ப ழுங்களை வருடா வருடம் காய்த்துப் போடும் "யாழ்ப்பாணத்து மாமரம்" என நினைத்து விடாதீர்கள். நன்றாக சடைத்த "புளிவிலாட்டு". அதுவும் நான் இந்த வீட்டுக்கு விலைபேசி மாப்பிள்ளையாக வந்த பின்னர் காய்க்கவில்லை. என் முகராசியோ என்னவோ. எனக்கு முன்னால் சற்றுத்தள்ளி எங்களது செல்வ மகள் துவாரகாக்கு பாலூட்டியவண்ணம் எனது மனைவி. நிலா அமர்ந்திருக்கிறாள்

"இஞ்சாரப்பா நாளைக்கு துவாரகாகக்கு கிளினிக் டேற், போக வேணும்" நிலா சொன்னாள்.

ஆனால் என் நினைவுகள் இன்றைய பத்திரிகை அறிவித்தலில் சுழன்றன. நான்

மெதுவாக சொன்னேன்.

"நாளைக்கு எங்கட சங்கக்கூட்டம் இருக்கு. இப்ப கொஞ்ச ரீச்சிங் நியமனங்கள் குடுக்கப்போறாங்களாம். போனாத்தான் என்ன மாதிரி என்று தெரியும். நாளைக்கு நீர் அப்பாவோட போயிற்று வாருமன்"

"ஏற்கனவே அவையோட ஒன்றும் கதைக்கேலாமல்கிடக்கு. அதுக்குள்ள அப்பாட்டை போய் இதக்கேட்டா அப்பாவும் அம்மாவும் கத்திக்கொண்டு இருப்பினம். உங்களை பேசுறதை என்னால தாங்கேலாது. பேசாமல் நான் நடந்தே போறன்" நிலா கோபத்துடன் கூறினாள்.

இந்த ஒரு வருசத்தில் ஒவ்வொரு நாளும் வெந்து வெந்து சாகும் எனது மனதில் இன்னொரு அடி. நான் பட்டம் பெற்ற மறுநாள் வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் பதிந்து எதிர்வரும் இருப்த்தியோராம் திகதியுடன் மூன்று வருசமாகிறது. இன்னும் வேலை கிடைக்கவில்லை. இந்த இலட்சணத்தில் கலியாணம் வேறு. ஒரு வருஷத்துக்கு முன்னர் பதினைந்து இலட்சத்தினை சீதனமாக வாங்கிக்கொண்டு என்னை நிலா குடும்பத்திற்கு விற்று விட்டனர். இன்று நாடெங்கும் ஏன் உலகெங்கும் தினம் தினம் வேதனையால் செத்துத்துடிக்கும் வேலையற்ற பட்டதாரிகளில் நானும் ஒருவன்.

நானும் எவ்வளவோ கனவுகளுடன் பல்கலைக்கழகத்தில் பயின்றேன். ஆனால் இன்று என்பிள்ளைக்கு பால்மா வாங்கிக்கொடுக்க முடியாதவனாக இருக்கிறேன். "சேவ்" எடுக்க காசு வேண்டுமென்றாலும் மனைவி, மாமா, மாமியை கெஞ்சும் நிலை. இதற்காக தாடி எடுக்காமல் விடுவம் என்றாள் மனைவி விட மாட்டாள். இப்பொழுதெல்லாம் மாமா மாமியின் நச்சரிப்பை தாங்க முடியவில்லை. "குத்துக்கல்லாட்டம் வீட்டில் இருந்து கொண்டு ஒரு சதத்துக்கும் பிரயோசனமில்லை"

நேரடியாக என்னிடம் கூறாவிட்டாலும் கதைகள் என்னையே சுட்டின. ஒவ்வொரு நாள் பொழுதும் வேதனையுடன்தான் விடிகிறது. விடிந்தால் குளித்து பிள்ளையார் கோவில் கும்பிட்டபின் கோவிலடி வாசிகசாலைதான் தஞ்சம்.

பத்திரிகைகளில் வேலைவாய்ப்பு அறிவித்தல்களைத்தான் முதலில் பார்ப்பேன். தலைப்புச்செய்திகள் எல்லாம் எனக்கு இப்போது இரண்டாம் பட்சம்தான். எத்தனை வேலைக்கு எழுதிப்போட்டாச்சு. ஒன்றும் இதுவரை கிடைக்கவில்லை. பத்திரிகை படித்த பின்னர் ஆலமரத்தடி இளவட்டங்களுடன்தான் காலந்தள்ளவேண்டும். அவனுகள் எல்லாம் ஏ.எல் எக்சாம் எடுத்தபின்னர் எஞ்சினியரிங் அல்லது மருத்துவபீடம்

செல்ல இருப்பவர்கள். தலைமுறை கடந்த கூட்டு. அவங்கள் இளவட்டங்கள், வீதியால் போய்வரும் பெண் பிள்ளைகளை பகிடி பண்ணுவாங்கள். ஆனால் ஊாச்சனம் என்னையே திட்டும்.

"வேலையில்லா பட்டதாரி கலியாணமும் கட்டிப்போட்டு ஊர்ப்பெடியளை பழுதாக்குது"

இப்பேச்சு என் மாமியார் வீட்டில் சென்றடைய வீட்டில் அகோர வசை எறிகணை என்னைநோக்கி. அன்றிலிருந்து ஆலடி செல்லத்தடை.

பின்னேரம் பந்தடி கிரவுண்டுக்கு போனால் விளையாட வாறவங்கள் எல்லாம் வேலைக்கு போறவங்கள். வேலை அலுப்பு நீங்க விளையாட வாறவங்கள். நான் என் கவலைகளை ஓரளவுக்கேனும் மறக்க, இரவில் நித்திரை வரவேண்டும் என்பதற்காக விளையாடப்போறேன். அவர்கள் வேலைத்தள அனுபவங்களை பகிர்ந்து கொள்வார்கள். சிலர் என்னையும் "நீ வீட்டிலை செய்யிற வேலையையும் சொல்லு" எனக்கிண்டலடிப்பார்கள். அவமானம் தாங்கமுடியாமல் விளையாடப்போகாமல் நின்று விடடேன்.

"சங்கம் வைத்து தமிழ் வளர்த்தனர் பண்டைய காலத்தினர். நாம் சங்கம் வைத்து வாழ்வுப்பிச்சை கேட்கிறோம். நாம் படிக்கும் காலத்தில் எவ்வளவு துன்பங்கள் பட்டிருக்கிறோம். எல்லாக்கஷ்டங்களையும் தாங்கிக்கொண்டோம். ஏன்? 4 அல்லது 5 வருடத்தில் எங்களுக்கொரு சுபீட்சமான வாழ்வு காத்திருக்கிறது என்று. எங்களைப்படிக்கவைத்த உள்ளங்களுக்கு ஆறுதல் கொடுப்போம் என்று. ஆனால் பட்டம் பெற்ற மறுநாளில் இருந்து எங்களுக்கு கலிகாலம். துன்பத்தின் எல்லைவரை வந்துவிட்டோம். விரக்தியின் விளிம்பில் துடிக்கிறோம். அரசே நாங்கள் படும் துன்பத்தை அறியவில்லையா?" இப்படியான உள்ளத்தின் அடிநாதம் துடித்துக்கொண்டிருக்க நான் பஸ்ஸில் பயணித்துக்கொண்டிருக்கிறேன். இந்தக்கணத்தில் ஏன் எந்தக்கணத்திலும் ஒவ்வொரு வேலையற்ற பட்டதாரியினுடைய இதயத்துடிப்பும் இதுதான். பஸ் செலவுக்காக நண்பன் ஒருவனிடம் ஐம்பது ரூபா பெற்றிருந்தேன். மனைவி வீட்டில் கேட்க இனியும் எனக்கு தைரியம் இல்லை.

வேலையற்ற பட்டதாரிகள் சங்க கூட்டம். ஆயிரத்துக்கு மேற்பட்டோர் வந்திருந்தனர். எல்லோர் முகத்திலும் துன்பக்களை. ஒருவர் இன்னொருவருக்கு பரிவாகபேசினர். வளாகத்தில் "பாடித்திரிந்த பறவைகளே பழகிக்கழித்த தோழர்களே பறந்து செல்கிறோம்" எனப்பாடி பிரிந்தவர்கள். வாழ வழியின்றி வதங்கி நின்றனர்.

திறைசேரியில் நிதியில்லை. நியமனங்கள் எல்லாம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. என அரசு கடிதம் அனுப்பியுள்ளதாக சங்கத்தலைவர் அறிவித்தார். தொடர்போராட்டங்களில் ஈடுபடுவது என்ற தீர்மானத்துடன் கூட்டம் நிறைவு பெற்றது. சாப்பிடக்காசில்லை வீடு திரும்பினேன்.

நடந்து சென்ற களைப்பினால் நிலா தலையிடி என்று படுத்திருந்தாள். பார்க்க பாவமாக இருந்தது. நான் வீணாக இண்டைக்கு யாழ்ப்பாணம் போனது. பேசாமல் நிலாவையும் பிள்ளையையும் கிளினிக்குக்கு கூட்டிக்கொண்டு போயிருக்கலாம். நிலா படுத்திருந்ததால் எனக்கு சாப்பாடு போட்டுத்தர ஆளில்லை. காலமையும் சாப்பிடவில்லை. பசி வயிற்றை கிள்ளியது.

"அவள் பெட்டையோட வெய்யிலுக்கை வெந்து வாறாள். மைனர் சுற்றுலா போய் வாறார்"

நிலாவின் தாய் புறுபுறுத்தார். வாழ்க்கை வெறுத்தது எனக்கு. போய் வெறும் விறாந்தையில் படுத்துவிடடேன். காலடியில் அரவம் கேட்டது. சாப்பாட்டுத்தட்டுடன் நின்றிருந்தாள் நிலா. என்னுடைய வரட்டுக்கோபம் அவளுடைய அன்பின் முன் பலிக்கவில்லை. முதல் வாய் சோற்றினை அவளே ஊட்டி விட்டாள். என் கண்கள் பனித்தன. நிலா மட்டுமே எனக்கு இன்னும் வாழ்க்கை பற்றிய நம்பிக்கை ஊட்டிக்கொண்டிருக்கின்றாள்.

"கிளினிக் போட்டு வரேக்க மாமியைக்கண்டனான்" நிலா என் அம்மாவைக் குறிப்பிடுகிறாள்.

"என்னவாம்?"

"கனநாளாய் நாங்கள் வீட்டை வரேல்லையாம். பின்னேரம் ஒருக்க கட்டாயம் வரட்டாம். போட்டு வருவம் என்னப்பா"

"ஏன் நாங்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் துள்ளிக்குதிக்கிறோம். சுளை சுளையா உழைத்துக்கொட்டிறன். இந்தத்திறத்திலை சொந்தங்களை பார்க்கிறதுக்கு?" எனது வாய் விரக்தி வார்த்தைகளை உதிர்த்துக்கொட்டியது.

" ஏனப்பா அப்படியெல்லாம் கதைக்கிறியள்? துவாரகா பிறந்த பலன் எங்களை இப்படிப்போட்டு ஆட்டுது. வாற சித்திரையோட நல்லகாலம் தொடங்குது. உங்களுக்கு கட்டாயம் வேலை கிடைக்கும். நாங்கள் பின்னேரம் போட்டு வருவம் என்னப்பா"

நிலா கெஞ்சலாகக்கேட்டாள். மனம் விருப்பமின்மையை நிறைத்தபோதும் தலை சம்மதக்குறி காட்டியது.

அம்மா வீட்டில் பனம் பாத்தியில் கிழங்கு பிடுங்கிக்கொண்டு இருக்கிறேன். நிலாவும் எனது தங்கச்சி வானதியுத் துவாரகாவுடன் விளையாடிக்கொண்டிருக்கின்றனர். அம்மா எனது அருகாமையில் கிழங்கின் தேலுரித்தபடி இருக்கிறார். காலம் பிந்தி விட்டது. மண் இறுகி இருந்ததால் கிழங்கை பிடுங்குவது கொஞ்சம் கஸ்டமாக இருந்தது.

"தம்பி" அம்மா கூப்பிட்டாள். நான் தலையை நிமிர்த்தி "என்ன?" என்பது போல பார்த்தேன்.

"வானதிக்கு ஒரு மாப்பிள்ளை பேசி வந்திருக்கு"

"மாப்பிள்ளைக்கு என்ன வேலை?"

(வேலை இல்லாத நான் வேலைபற்றி கேட்டேன். ஏனென்றால் எனக்குத்தான் தெரியும் வேலை பற்றிய அருமை) நான் கிழங்கு பிடுங்கியபடி கேட்டேன்.

"பெடியனுக்கு போன 16ம் திகதிதான் பட்மளிப்பு விழா நடந்ததாம். பெடியனும் உன்னை மாதிரி ஒரு விஞ்ஞானப்பட்டதாரியாம்"

நான் புடுங்கி கிழங்கொன்று இழுத்த இழுவையில் பாதி முறிந்து வந்தது. சிறிது மெளனத்தின் பின் நான் மெளனத்தை கலைத்தேன்.

"நான் என்னத்தையம்மா செல்லிறது. பெடியனுக்கு வேலை கிடைக்கவிட்டு கட்டுங்கோவன். நான் படுற பாட்டை பார்த்துக்கொண்டுதானே இருக்கிறியள். அதுக்குப்பிறகும் வேலை இல்லாத பெடியனுக்கு வானதியை கட்டுறது அவளும் கஸ்டப்படுவாள். நீங்களும் கஷ்டப்படுவியள். இதுக்கு மேல நான் என்னத்தை சொல்லிறது."

எனது மனது, எனது தங்கைக்கும் பெற்றோருக்கும் கவலைப்படுவதை விட இன்னொரு வேலையற்ற பட்டதாரிக்காக கூடுதலாக அனுதாபப்பட்டது.

அம்மாவும் அப்பாவும் ஏற்கனவே தீர்மானித்துவிட்டுத்தான் என்னிடம் ஒரு சம்பிரதாயத்துக்காக கேட்டுள்ளார்கள் என அவர்களின் பேச்சிலிருந்தே தெரிந்தது. அவர்கள் வாற கிழமை கொழுக்கட்டை மாத்தவும் திட்டமிட்டு விட்டனர். அன்று வானதி திருமண விடயத்தில் என்பெற்றோருடன் முரண்பட்டுக்கொண்டிருந்தாள். நான் மனைவி

பிள்ளையை கூட்டிக்கொண்டு திரும்பி விட்டேன். அவித்த கிழங்குகளை கூட எடுத்து வரவில்லை. நிலா இதையிட்டு வழிவழியாக புறுபுறுத்துக்கொண்டு வந்தாள்.

அடுத்தவாரம் நடைபெற்ற வானதியின் கொழுக்கட்டை மாற்றும் வைபவத்திற்கு நான் போகவில்லை. அப்பாவுக்கு சரியான கோபம். என்னை இனி வீட்டுப்பக்கம் வரவேண்டாம் என் பேசியதாக அறிந்தேன். ஏனென்றால் நான் பதினைந்து லட்சத்திற்கு விற்கப்பட்டவன். பத்து லட்சத்துக்கு புதுப்பொருள் வாங்கியாச்சு தானே. இந்தப்பொருட்களின் பொதுத்தன்மை இரண்டும் வேலையற்றவர்கள் தான்.

***

தெல்லிப்பளை மனநோயாளர் வைத்தியசாலை. நான் கம்பி வலைகளால் சூழப்பட்ட கூண்டில் அடைக்கப்பட்டிருக்கிறேன். "நான் விசரன் கத்திறன் எண்டு யோசிக்காதைங்கோ!" "எனக்கு வேலை வேண்டும். நான் உழைத்து என்ர மனிசி பிள்ளையை காப்பாற்ற வேணும்."

"என்ர முதல் எதிரி இந்த நாட்டின் அரசுதான். ஏனென்றால் நான் பி.எஸ்.ஸி பட்டம் பெற்று மூன்று வருஷமாக எனக்கு வேலை தரேல்லை. எனக்கு வேலை தராட்டியும் பரவாயில்லை. நான் விசரனாகிப்போனேன். ஆனால் இந்த நாட்டிலுள்ள எல்லாப்பட்டதாரிகளுக்கும் வேலை குடுங்கோ. வேறையாருக்கும் இந்த நிலை வர விடாதேங்கோ!"

"என்ர இரண்டாவது எதிரிகள் என்னைப்பெத்த அம்மாவும் அப்பாவும். என்னை விசரனெண்டு யோசிக்காதேங்கோ? ஏனென்டால் நான் வேலை கிடைக்காமல் கல்யாணம் வேண்டாம் என்றால், கேட்காமல் என்னை பதினைஞ்சு லட்சம் சீதனமாக வாங்கிக்கொண்டு வித்துப்போட்டினம்."


நான் இன்னும் கத்திக்கொண்டு..................... இருக்கிறன். பலர் என்னை பலவந்தமாக இறுக்கிப்பிடிக்க எனக்கு ஊசி ஒன்று போடப்படுகிறது.

எனது நினைவுகள் மங்கத்தொடங்குகின்றன. இப்பொழுது எனக்கு ஒரு உருவம் மட்டும் தெரிகிறது. கம்பிக்கூண்டுக்கு வெளியே நிலா குழந்தையுடன் கண்களில் நீர் வடிய நின்று கொண்டிருந்தாள். எனது செல்வ மகள் தன் பிஞ்சு விரல்களை அசைத்து எனக்கு விடை கோடுத்துக்கொண்டிருந்தாள். ■

*(சுடர் ஒளியில் பிரசுரமாகிய சிறுகதை : 23 – 29.07.2002)*

சிறுகதை 6

# முளையில் கருகும் காதல்கள்



படம் : சுடர் ஒளி

"இஞ்சாரப்பா கொஞ்சம் மழை விட்டிருக்கு. பரமேஸ்வராச்சந்திக்கு போய் சுடச்சுட பாண் இருந்தால் வாங்கி வாங்கோ. பாண் இல்லாட்டி சந்திக்கடையிலை றொட்டி வாங்கி வாங்கோ"

"ஏன் இரவைக்கு புட்டை அவியுங்கோவன்"

"நேற்று விறகை எடுத்து உள்ளுக்குப்போட மறந்து போனன். எல்லாம் மழையில நனைஞ்சு ஈரமாப்போட்டுது. எனக்கும் பஞ்சியாக்கிடக்கு. மச்சும் இன்ரஸ்ட்டா போகுது. ஒருக்கா போட்டு வாங்கப்பா"

பரமநாதனிடம் விமலாதேவி கெஞ்சினாள். தொலைக்காட்சியில் பகல் இரவு கிரிக்கட் காட்சி நடக்கும் நாட்களில் இரவுச்சாப்பாடு பாண் அல்லது கடைப்பார்சல்தான். இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான போட்டியை தவறவிட பரமநாதன் விரும்பவில்லை.

பிரியாவைத்தவிர, பிரியாவின் அப்பா பரமநாதன், அம்மா விமலாதேவி, அக்கா

அஸ்வினி, தம்பி நிஷாந் எல்லோரும் தீவிர இந்திய ரசிகர்கள்.

பிரியா ஆழமாக சிந்திக்கத்தெரிந்தவள். நாம் இலங்கையில் பிறந்திருக்கிறோம் எதற்காக இந்திய அணியை ஆதரிக்கவேண்டும்? முன்னர் தான் இலங்கையில் இனத்தால், மொழியால் பிளவுபட்டு பகையுணர்வுடன் இருந்தோம். இப்பொழுதுதான் எங்கள் அழகிய தீவில் சமாதானப்புறா உயர உயரப்பறக்கிறதே.

வெளியில் பலத்த மழை பெய்துகொண்டிருந்தது. வெளிக்கேற் திறக்கும் சத்தம் கேட்டு பிரியா எட்டிப்பார்க்கிறாள்.

“எல்லோரும் வந்தாச்சா? பிரியா அந்த லொக்கை எடம்மா. கேற்றைப்பூட்டி விடுவம். என்று கூறியபடி பரமநாதன் மோட்டார்சைக்கிளை கஸ்டப்பட்டு வீட்டுக்குள் ஏற்றினார்.

“இல்லையப்பா காண்டீபன் அண்ணா மச் பாக்கவாறனெண்டு தம்பியிட்டை சொன்னவராம். வாறாரோ தெரியாது. கொஞ்சநேரம் பாத்துவிட்டு பூட்டுவம்” பிரியா சத்தமாக கூறினாள்.

அவன் நிச்சயமாக வருவான் என்று பிரியாவுக்கு தெரியும். காண்டீபன் பல்கலைக்கழக மாணவன். பக்கத்து வீட்டில் வாடகைக்கு இருக்கிறான். பிரியாவின் குடும்பத்துடனும், பிரயாவுடனும் அன்புடன் பழகுபவன்.

போட்டி தொடங்க முன்னர் காண்டீபன் வந்தான்.

இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கையை இலங்கை எட்டிப்பிடிக்குமா? அல்லது அதற்குள் சுருண்டு விடுமா? என எதிர்வு கூற முடியாதபடி விறுவிறுப்பாக போட்டி நடைபெற்றது. எல்லாக்கண்களும் தொலைக்காட்சியை நோக்கின. ஆனால் இரண்டு ஜோடிக்கண்கள் மட்டும் இடையிடையே ஒன்றையோன்று நோக்கின. அவை புதுமொழி பேசின. உலகிலே எவரும் கற்றுக்கொடுக்காமல் பேசப்படும் மொழியை அவை பரிமாறின.

முப்பத்தைந்து ஓவர்கள் முடிந்தன. இலங்கையின் வெற்றி வாய்ப்பு பிரகாசமாகத்தெரிந்தது. பிரியாவின் அக்காவும் தாயும் படுக்கைக்கு சென்று விட்டனர்.

நிஷாந் அழுவாரைப்போல இருந்தான்.

"இவங்கள் இந்திய ரீம் பிளேயர்ஸ் காசு வாங்கி விளையாடுறாங்கள் போல. என்ன படு மோசமான போலிங்கும் பீல்டிங்கும்" என பிரியாவின் அப்பா சலித்துக்கொண்டார். இறுதியில் இரண்டு ஜோடிக்கைதட்டல்கள் இரவு பத்து மணி அமைதியைக்குலைத்தன. இலங்கை அணி வென்று விட்டது.

"பிரியாவும் நிஷாந்தும் காண்டீபன் அண்ணாவை விட்டிட்டு வாங்கோ. அப்பா ஈரத்துக்க போனால் ராவைக்கு இழுக்கும்"

பரிசளிப்பு வைபவத்தை பார்க்க விடாமல் காண்டீபனை விரட்டினார் தகப்பன். வெளியில் இலேசாக மழை தூறிக்கொண்டிருந்தது.

"என்ன நிஷாந் சரியான கவலைபோல" காண்டீபன் அனுதாபமாக கேட்டான்.

"இல்லை காண்டீபன் அண்ணா நாளைக்கு பள்ளிக்கூடத்திலை இலங்கை சப்போர்ட்டர்களின்ர முகத்திலை முழிக்க வெக்கமாய் கிடக்கு" கவலையுடன் கூறினான்.

"விளையாட்டு தானேயப்பன். விளையாட்டிலை வெற்றி தோல்வி சகஜம். நீர் கவலைப்படாமல் நித்திரை கொள்ளும்" என நிஷாந்தின் கன்னத்தில் செல்லமாய் தட்டிவிட்டான்.

"எப்பவும் எங்கட பக்கம்தான் வெற்றி" என பிரியா காண்டீபனைப்பார்த்து கூறினாள்.

"எல்லாத்திலையுமா"

"எல்லாத்திலயுமெண்டா விளங்கேல்லை"

"எல்லாத்திலையும் தான் இரவு வடிவா யோசிச்சுப்பாரும் விளங்கும்" எனக்கூறி காண்டீபன் விடை பெற்றான்.

மறுநாள் காலை பிரியாவின் வீட்டின் சம்பாசனை. மதிலைத்தாண்டி அடுத்தவீட்டு அறையில் படித்துக்கொண்டிருந்த காண்டீபன் காதுகளை எட்டின.

"மழைக்கு குறோட்டன் எல்லாம் நல்லா வளர்ந்து சடைச்சுப்போய் இருக்கு எல்லாத்தையும் அளவாய் வெட்டி விடவேணும் அம்மா" என்றாள் பிரியாவின் அக்கா அஸ்வினி.

"வீட்டுக்க இருக்கிறதுகளை எப்பவும் வெட்டாலம். முதலில் வெளியில் இருந்து வாறதுகளை வெட்டவேணும்" தாய் தொடர்பில்லாமல் பேசினாள்.

"என்னப்பா சொல்லிறாய் விளங்கிற மாதிரி சொல்லன்" பரமநாதன் மனைவியை சீண்டினார்.

"நேற்று அந்தப்பெடியன் ஏன் மச் பாக்க வந்தது. ஆர் வரச்சொன்னது"

காண்டீபன் காதுகள் கூராகின. பேச்சு தன்னை சுட்டுவதாக உணர்ந்தான்.

"காண்டீபன் நல்ல பெடியனப்பா. பல விசயங்கள் தெரிஞ்ச பிள்ளை. பழகிறதுக்கு, கதைக்கிறதுக்கு அவனை மாதிரி ஒரு பெடியனை பாக்க ஏலாது. ஏதோ நிஷாந் தன்ர பிரண்ட் எண்டதால கூட்டி வந்தான்." பிரியாவின் அப்பா அவனுக்கு நற்சான்றிதழ் வழங்கினார்.

"என்னெண்டாலும் பொம்புளப்பிள்ளை பெத்த தகப்பன் மாதிரியே நடக்கிறியள். நான் கன நாளாப்பக்கிறன். பிரயாவும் அவனும் சிரிச்சுசிரிச்சு பேசுறாங்கள். அவன்ரை பார்வையே சரியில்லை" பிரியாவின் தாய் கொதித்தெழுந்தாள்.

"நீ என்ன சொல்லிறாய்" பரமநாதன் வியப்புடன் மனைவியை நோக்கினார்.

"பிரியாவின் கொப்பிக்க காலமை அவள் ரியூசனுக்கு போகேக்க இந்த இழவு விழுத்து கிடந்திச்சு" என பிரியா எழுதிய காதல் கடிதத்தை காட்டினாள்.

பரமநாதன் தம்பதியர் படித்தவர்கள். காதலைப்பிரிக்க மூளையாகக் காய்நகர்த்தினர். ஆனால் தாங்கள் இருவரும் காதல் திருமணம் புரிந்தவர்கள் என்பதை மறந்து விட்டனர்.

பெற்றோரின் முடிவுகள் பிரியாவுக்கு தெரியாமலேயே அமுலாகின. பிரியாவை அடுத்த கிழமை கொழும்பில் பெரியம்மா வீட்டில் விடுவதென்று தீர்மானித்தாயிற்று.

ஆனால் காலை நடைபெற்ற சம்பவம் பற்றி எதுவும் பிரியாவுடன் பேசுவதில்லை என முடிவாகியது.

"நீங்கள் சொன்னமாதிரி அவன் நல்ல மனிசனாக இருந்தால் எங்கட பிள்ளையின்ர வாழ்க்கையை பாழாக்காமல் தான் விட்டிட்டுப்போகட்டும் பார்ப்போம். என்று பிரியாவின் தாய் காண்டீபனுக்கு கேட்கக்கூடியதாக தனது முடிவைக்கூறினாள்.

பிரியா கொழும்பு செல்வதற்கான ஆயத்தங்கள் துரித கதியில் நடைபெற்றன. இந்த ஒரு கிழமை காண்டீபனை அவளால் காண முடியவில்லை.

பயணத்துக்கு முதல் நாள் காண்டீபன் இருந்த வீட்டுக்கு சென்று வீட்டு அன்ரியிடம் விசாரித்தாள்.

"ஒரு கிழமைக்கு முன்னமே றுமை விட்டுப்போட்டானம்மா. எவ்வளவு நல்லபிள்ளை. எனக்கு சரியான கவலை. ஏதோ உன்னிடம் குடுக்கச்சொல்லி கடிதம் தந்தவன்" எனக்கூறி கடிதம் ஒன்றை பிரியாவிடம் கொடுத்தார்.

*"என்னன்பின் இனிய பிரியா!*

*உனது காதலுக்கு முன் கிடைத்தது குடும்ப நட்பு. ஒரு காதலினால் குடும்ப மொன்று சிதைக்கப்படுவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. உன்னாலும் முடியாது. ஏனென்றால் எமது இருவர் சிந்தனையும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். இவனெல்லாம் ஒரு காதலன். இவனுக்கெல்லாம் ஒரு காதல் என்று நினைப்பார்கள். ஆனால் எனக்குத்தெரியும் நீ அப்படி நினைக்க மாட்டாய் என்று. ஏனெனில் காதல் பரிசாக ஒரு றோசாப்பூவைப்பறிக்கக்கூட நீ எனக்கு அனுமதி தரவில்லை. பாவமென்றாய் றோசாச்செடி. நீ கொழும்பு செல்வதாக அறிந்தேன். உன்னை ஒரு மருத்துவராய் பார்க்க வேண்டும் என்பதே எனது ஆசை. ஏனென்றால் பிறர் பார்வையில் நான் ஒரு மனநோயாளி. ஆ ன ா ல் இலங்கை அணியின் வெற்றிக்காக இருவர் கைகள் எப்போதும் தட்டப்படும் என்பது மட்டும் எனக்கு தெரியும். ஏனென்றால் எம்மை இணைத்த முதல் ரசனை இதுதான்"* ■

***சுடர் ஒளி வாரமலர்***

# கவிதைகள்



1) நாம் எங்கே போகிறோம்
2) வெகு தொலைவில் இல்லை
3) பிடிக்கவில்லை
4) சபிக்கப்பட்டவர்கள்
5) அடி மனதின் ஆசை இதுதான்
6) நாம் நியத்தில் எங்கு வாழ்கிறோம்
7) வாழ்க்கைப்பாதை
8) என் எதிரிகள்
9) பல்கலைக்கழக கல்ஆசனத்தின் விண்ணப்பம்
10) ஓட்டோகிராப்பின் முகப்புப்பக்கம்
11) காதலின் எதிரி
12) காதலர்களே கொஞ்சம் நில்லுங்கள்

# நாம் எங்கே போகிறோம் !

கவிதை -1

மனிதனுள் மனிதம் செத்துப்போய் விட்டதா?
நாம் எங்கே போய்க்கொண்டு இருக்கிறோம்!
பிரித்தறியும் பகுத்தறிவு பாழாகிப்போனதா?

சமகால செய்தித்தாள்கள் சொல்லிப்போகும்,
செய்திகள் தான் என்ன?
இரத்தம், கத்தி, யுத்தம் !
நெஞ்சம் அதிர்கிறது.
பள்ளி மாணவி கடத்தப்பட்டு
நடுநிசியில், கற்பழிக்கப்படுகிறாள் !

காதலிக்க மறுத்த காதலி உயிருடன் எரிக்கப்படுகிறாள் !
காதுவரை கம்பளி போர்த்தி விட்ட மனைவியவள்,
கர்ப்பிணியாய் இருந்த போதும்
துணைவனால் தலைபிளந்து இறக்கிறாள்.

மனிதர்கள் மனநோயாளிகளாய் மாறிப்போனது எப்போது?
வக்கிரத்தின் இருப்பிடம் மனித இதயங்களா?
உக்கிரப்போரிலும், உலுக்கிவிட்ட வறுமையிலும் ,
நாம் சிதைக்கப்படாமல் மீண்டும் மீண்டும் எழுந்தோம்,
எதனால்?
உன்னத மனித உணர்வாலும்
உருக்குலையாத பண்பாட்டாலும் தான்.
அனால் இப்பொழுது நாம் எங்கே போகின்றோம்.

*(நமது ஈழநாடு, 05.05.2003)*



படம் : நமது ஈழநாடு

# வெகு தொலைவில் இல்லை

கவிதை - 2

ஒரு விவசாயியின் குமுறல் இது !
விதைத்து விட்டிருக்கிறார்கள்
வயல்வெளியெங்கும்,
கண்ணிவெடிகள், மிதி வெடிகள்,
அறுவடையை நாங்களல்லவா செய்கிறோம்,
உயிர்கள், கால்களை விலையாக கொடுத்து.
இப்படியிருக்க நாம் எதை விதைப்பது எதை அறுப்பது.
ஒரு மீனவனின் குமுறல் இது !
கடற்றொழில் எமக்கு மறந்து போயிற்று,
ஏனென்றால் நாம் கடலில் இறங்கி ,
வருசங்கள் பலவாச்சு.
ஒரு நாள் தொழில் சென்றால்
மறுநாள் முடியவில்லை,
கச்சேரி வாசலில் காத்துக்கிடக்கிறோம்
மாதக்கணக்கில்.



படம் : இணையம்

சீவல் தொழிலாளி அழுகிறான்,
அவன் நிதம் ஏறி தொழில் செய்த பனை இங்கே,
கிடையாய் கிடக்கிறது சென்றியில்,
வெற்று முட்டி போல் அவன் வயிறு வாடிக்கிடக்கிறது.
இப்படி எத்தனை எத்தனை தொழிலாளர்,
தொழில் செய்ய முடியவில்லை.
காசில்லை, அதனால் உண்ணாமல் வாடிக்கிடக்கிறார்கள்.
ஏன் தமிழராய் ஈழ மண்ணில், பிறந்தோம் என்ற குற்றத்துக்காகவா?
இல்லை, இல்லை நிச்சமாக இல்லை,
எம்மண்ணில் நாம், சுதந்திரமாக தொழில் செய்யும் காலம்,
வெகு தொலைவில் இல்லை.

*(ஞாயிறு தினக்குரல் – 13.04.2003)*

# பிடிக்கவில்லை.

கவிதை -3

ஒவ்வோர் மண்ணிற்கும் ஒவ்வோர் அடையாளம்
பனை கொண்டு குறியிட்ட நிலமது,
யாழ்பாடி வாழ்ந்திட்ட மண்ணிது,
புகழ் பல கொண்டமைந்த பூமியிலே,
நாரில்லை, தும்பில்லை
அத்தனையும் கட்டித்தேன்
கறுத்தக்கொழும்பான் ! வேறெங்கே காண்பீர்,
தித்திக்கும் முருங்கை இங்கே,
கிழங்கொடு பாணிப்பனாட்டு இனித்திடும்,
கூழொடு கூவில் கள்ளெங்கே காட்டுவீர்.

இது படித்தோர் பூமியையா,
பார் எங்கும் புகழ் பரப்பும் புனிதர் வாழ்ந்த நிலைமையா,
இமயத்து உச்சியிலே மார் நிமிர்த்தி கத்திடுவோம்,
கொடும்பகை விரட்டிட மறவர் வாழும் பூமியிது.



இத்தனையும் இருந்தென்ன பயனிங்கே?
எதிர் வீட்டுப்பெண்ணை இங்கே காதலிக்க முடியவில்லை
சாதி எனும் வேலி கொண்டு தடுக்கிறது சமுதாயம்
வன்னி போனேன், மலை போனேன், மன்னாரும் போய் வந்தேன்,
இல்லை, இல்லை மட்டக்களப்பிலும் இல்லை
சாதி எனும் பேதம்
சிங்களத்து தேசத்திடம் இது பற்றி நாம் கற்கவேண்டும் பாடம்

திருந்தாது இச்சமூகம் திருந்தாது,
இரண்டாயிரம் ஆண்டென்ன,
இருபதினாயிரம் ஆண்டு போனாலும்
இச்சமுகம் திருந்தாது.
பிடிக்கவில்லை, எனக்கு பிடிக்கவில்லை
யாழ்ப்பாணத்து சமுகத்தை சத்தியமாய் பிடிக்கவில்லை
ஆனாலும, நானொரு யாழ்ப்பாணத்தான்.

*(ஞாயிறு தினக்குரல் 09.06.2002)*

# சபிக்கப்பட்டவர்கள்

கவிதை – 4

எம்வாழ்வு
மீண்டும் யுத்தத்துள்
புதைக்கப்பட்டுள்ளது.

அரிசி,மா,சீனி
பற்றியே அதிகமாய்
கதைக்கின்றோம்.

பெற்றோல்,
மண்ணெண்ணைக்கும்
எரிபொருட் அட்டை.

பாதைகள் மூடப்பட்டு,
ஊரடங்கள் அமுக்கப்பட்டு,
வாழ்கின்றோம்.

நான்குநாள்
பத்திரிகைகள், அதில்
நீண்ட நிரலில்
கொலைகள்,
கடத்தல்கள்.

பதுக்கல் பொருள்கள்,
கறுப்புச்சந்தையில்
கொள்ளைவிலையில்
விற்கிறார்கள்.
அரிசிக்கும் மாவிற்குமே
அல்லற்படுவதால்
மீனைப்பற்றி
சொல்லவில்லை.

முருங்கை இலையினதும்,
மரவள்ளிகிழங்கினதும்
தயவால்,
இதுவரை உயிருடன்
இருக்கின்றோம்.

எந்தக்கப்பல் வருகிறது,
என்ன கொண்டு வருகிறது,
A 9 எப்ப திறக்கிறது
என்பது பற்றியே
அதிகம் கதைக்கின்றோம்.

நாம் என்ன,
ஆண்டவனால் சபிக்கப்பட்டவர்களா
யுத்தத்துள் வாழ்வதற்கு.




*(குறிப்பு :- 11-08-2006, A 9 பாதை பூட்டப்பட்ட பின்னர் யாழ் குடாநாட்டு நிலைமையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட கவிதை)*

## அழமனதின் ஆசை இதுதான்

கவிதை -5

அந்த ஊரின் பெயரை நான் சொல்லப்போவதில்லை,
சத்தியமாய்ச் சொல்கிறேன்
எனக்கும் பயம்தான், கடும்பயம்.
அநாதரவாய் வீதியில் செத்துக்கிடக்க,
அல்லது காணமல்போக நான் விரும்பவில்லை,
ஏனென்றால்,
இங்கு ஒருசாரார் கைகளில் மட்டும் துப்பாக்கி இல்லை,
துப்பாக்கி கலாச்சாரம் மலிந்து கிடக்கின்றது.
இங்கிருக்கும் மக்கள் அடிமைகளா,
எடுப்பார் கைப்பிள்ளைகளாக உள்ளனர்.
ஏதொ அப்படி இருப்பதால் தானோ
இன்னும் இங்கு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.
ஒருவகையில் அவர்கள் பிழைக்கத்தெரிந்தவர்கள்,
ஒருகாலத்தில் அவனுக்கும்,
இன்னொரு காலத்தில் இவனுக்கும்,
தலையாட்டிக்கொண்டிருக்கின்றனர்.
வெளியில் மட்டும் தாம்,
"படித்த சமூகம்" என்று சொல்லித்திரிகின்றனர்.
நிறைய யுத்தங்கள் அவர்களை ஆட்கொண்டன,
அளவிடமுடியா இழப்புக்களை
அவர்கள் சந்தித்துவிட்டார்கள்,
அதற்காக அவர்கள் தமது சுயத்தை இழப்பதா?
வாயிருந்தும் ஊமைகளாக,
அவயங்களிலிருந்தும் முடவர்களாக,
வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.
காலத்தின், நீதியின், உண்மையின்
கண்ணாடிகளாக இருக்கவேண்டிய பத்திரிகைகள்,


படம் : இணையம்

காலத்திற்கு காலம்,
பக்கச்சார்பு ஊதுகுழல்களாகவே இன்னும் இருக்கின்றன.
அந்த ஊரில் வாழும் மக்கள்,
நிறைய வாசிக்கின்றார்கள் நிறைய எழுதுகிறார்கள்,
பல முனைகளில் சிந்திக்கின்றார்கள்,
அடையாளங்காண முடியாத நிர்ப்பந்தங்களால்
ஒரு சில முனைகளில் மட்டும் எழுதுகிறார்கள்.
புத்தக வெளியீட்டுச் சந்தைகளாக
இன்னும் அந்தப்பிரதேசம் விளங்குகின்றது.
பலதரப்பட்டவர்களின் கருத்துக்களையும்
விளங்கி வைத்திருக்கின்றார்கள்.
தமது பிள்ளைகளின் பிரிவு, இழப்பை
இனியும் அவர்கள் விரும்பவில்லை.
யாரும் தம்மை அடிமைப்படுத்துவதையும்,
தமது உழைப்பு சுரண்டப்படுவதையும்
அவர்கள் விரும்பவில்லை.
நிறைவான சமயநம்பிக்கையுள்ளவர்கள்
அவர்கள்,
கட்டுக்கோப்பான சமூக அமைப்புள்ளவர்கள்,
அவர்கள் விரும்புவதெல்லாம்
உலகத்தவர்கள் யாவரினதும், ஏன்
இவ்வுலக அனைத்து ஜீவராசிகளின் நலனைத்தான்.
இதற்காக எவருடனும் இணைய,
புரிந்துணர்வுடன் கைகோர்க்க தயாராகவுள்ளனர்.
இவை எல்லாவற்றையும் தரக்கூடிய சமாதானத்தையே
அவர்களின் அடிமனது வேண்டுகிறது.


படம்: நித்திலவர்ணன்

கவிதை -6


## நாம் நியத்தில் எங்கு வாழ்கிறோம்?


படம் : இணையம்

அறிவுவந்த நாள்முதல்,
எம் ஆத்மா அடங்கிப்போகும் வரை
நாம் நியத்தில் எங்கு வாழகிறோம்,
நாம் வாழ்வதெல்லாம் கனவுலகில்தான்.
இறுதிவரை இப்படியே வாழ்ந்துவிட்டு,
நாம் மாண்டு போகின்றோம்.
ஆதவனின் பிரிவுதரும் இருள்தான்
கனவுகளின் உலகுமல்ல,
கனவுகள் யாவும்
உறக்கத்தில்தான் உதிப்பதுமல்ல,
எம்பகற்கனவுகள் எத்தனை, எத்தனை.
அத்தனையும் நியத்தில் நிகழாத,
நிகழ்த்த முடியாத, நிராசைகள்.
அடையத்துடிக்கும் மனிதன் குமுறல்.
பருவங்கள் எதிலும் கனவுகள் உண்டு.
ஆனால் வடிவங்கள் மாறும்
அவை பூசும் வர்ணங்கள் மாறும்.

கவிதை -7


## வாழ்க்கைப்பாதை


படம் : இணையம்

நீண்டு செல்கிறது,
காலதேவனின் பாதை,
அதல் எம்பயணங்கள்
தொடர்கின்றன.
சற்று நின்று
திரும்பிப்பார்க்கின்றோம்,
கல்லும் முள்ளும்
மேடு பள்ளங்களும்
தெரிகின்றன.
மனதில் பிரமிப்பு !
இத்தனையும் கடந்தா வந்துள்ளோம்.
நெஞ்சில் திடம்கொண்டு
வேகநடையுடன்
புறப்பட்டுவிட்டோம்,
இனி, எம்எதிர்கால வாழ்க்கை
எமக்கு சுமையாக
இருக்கப்போவதில்லை.

# பல்கலைக்கழக கல்ஆசனத்தின் விண்ணப்பம்.

கவிதை -8



செக்கு மாடு போல் தினம்
என்னைத்தேய்த்த உள்ளங்களே
ஒவ்வோர் உள்ளங்களும்
அதில் புதைந்த எண்ணங்களும் யாம் அறிவோம்.

என்மேல் அமர்ந்திருந்து பலர் காதல் கொண்டார்.
சிலர் வாழ்வில் சேர்ந்து கொண்டார்,
பலர் பிரிந்து போனார்,


ஏமாறிய காதலி விட்ட கண்ணீரையும்,
ஏமாற்றப்பட்ட காதலன் குடித்த தண்ணீரையும்,
நான் அறிவேன்.
நான் கண்ட சிகரட் கட்டைகள் ஏராளம்.

நீங்கள் வருவீர்கள்,
மூன்று நான்கு ஆண்டுகளில் பிரிந்து போவீர்கள்,
எனக்கு இருபத்தைந்து ஆண்டுகளாக
இதே இடம் தான்.
உங்கள் காதலும் தெரியும்,
உங்கள் அம்மா, அப்பா காதலும் தெரியும்.
என் அருகில், கொன்றை மர நிழலில்
பொங்கலிட்டீர்கள்,
ஒரு இலையில் பலகைகளால்
சாதம் உண்டீர்கள்,
நான் பூரித்துப்போனேன்.

கனிய கனிய இனித்துப்பேசினீர்
வழிய வழிய வாளி வைத்தீர்,
நேரமில்லாமல் காதலித்தீர்,
ஆனால் இறுதியில்
பொய் முகம் காட்டி ஏமாற்றிச்செல்லாதீர்.
நட்பை நட்பாக புரிந்து கொள்ளுங்கள்.
காதலை காதலாக புரிந்து கொள்ளுங்கள்,
தயவு செய்து நட்பை காதலாகவும்,
காதலை நட்பாகவும் மாற்றாதீர்கள்.

கவிதை -9

## ஓட்டோகிராப்பின் முகப்புப்பக்கம்




எம் வாழ்க்கை என்னும் புத்தகத்தில்
என்றும் நினைவில் பதிந்த பக்கங்கள்
எமது வளாக வாழ்க்கைதான்.
எமக்கு கைக்குட்டை பாவிக்கமட்டும்
கற்றுத்தரவில்லை கம்பஸ் வாழ்க்கை,
நட்பைப் புரிந்துகொண்டோம்,
பண்பை பாசத்தை புரிந்து கொண்டோம்,
காலத்தின் கட்டாயத்தில் பிரிந்துபோகிறோம்,
பிரிவின்வலி தெரிகின்றது.
"பாட்டா" போட்டுவந்த நான் இன்று
"ஓட்டோகிராப்" உடன் நிற்கின்றேன்,
விழமுட்டிய கண்ணீருடன்,
நெஞ்சம் நிறைந்த சோகத்துடன்,
என்மனதில் "கல் எறிந்த" புனித கரங்களை
பற்றிக்கொள்கிறேன்.
என்மனதில் உங்கள் நினைவுகள்
என்றும் நிலைத்திருக்கும்.
என் நினைவுகளை மீட்டுப்பார்த்து,
உங்கள் பேனாவின் ஒரு துளி மை
எனக்காய்த் தாருங்கள்.

கவிதை -10

## என் எதிரிகள்

சுய திறமையால்,
நேர்மையுடன்
சவால்கள் பல எதிர்கொண்டு,
அங்குலம் அங்குலமாக
முன்னேற முயன்றால்,
கபடத்தனமாய்
இழுத்துவிடுகிறார்கள்
சுயநலவாதிகள்.


வாழ்க்கையின்,
வெற்றிப்பயணத்தில்,
முக்கிய திருப்பங்களில்,
போர் அரக்கன்
என்னை
நசித்துவிடுகின்றான்.



# காதலின் எதிரி

கவிதை -II

காலதேவனின் காலில் வீழ்ந்து கதறி அழுகின்றேன் !
கட்டளை பிறப்பியுங்கள் தேவா, கலண்டர் அடிப்போருக்கு,
காணமல் போகச்செய்யுங்கள் அந்தத்திகதியை,
இவ்வுலகில் என்வாழ்க்கையை கேள்விக்குறியாக்கியது
அந்தத்திகதிதான் – பெப்பிரவரி – 14.



இவ்வுலகில் ஏழுநிறங்கள் வேண்டாம்,
ஆறுவர்ணங்களுடன் வாழ்ந்திட நான் தயார்,
கருமை இருட்டினுள் என்னை புதைத்துவிட்டது,
காதலை குறித்து நிற்கும் அந்த பச்சைநிறந்தான்.

இரட்டை இதயங்களை இணைத்துநிற்கும்
ஈட்டியை எனக்கு காட்டாதீர்,
இதைத்தான் காணவேண்டும் எனின்
எனது இரண்டு கண்களையும் இழக்க நான் தயார்.

பின்லேடனுக்கு உதவ நான் தயார் – அவன்
காதல் பூங்காக்களை உடைப்பதாக உறுதிதந்தால்.
காதலையும், காதலர்களையும் எனக்குப்பிடிப்பதில்லை,
இத்தனையும் காதலர் கல்லறைகள் கணக்கில் அதிகரிக்காமல் இருக்கத்தான்.

நான் மீண்டும் வாசிக்கத்தெரியாத பாலகனாக,
மாறிவிடத்துடிக்கிறேன்,
ஏனென்றால் பார்க்கும் படைப்புக்களெல்லாம்
காதலைப்பற்றிச்சொல்வதனால்.

## காதலர்களே கொஞ்சம் நில்லுங்கள்.

கவிதை -12

நீங்கள் கை கோர்த்து போவது தெரிகிறது,
இது வாழ்க்கையின் இறுதிவரை தொடருமா?
என இருவரும் ஒரு முறை கேட்டுப்பாருங்கள்.
உங்கள் உணர்வுகளுக்கு வினா எழுப்ப
எனக்கு உரிமையில்லை,
போலிகள் மலிந்து விட்ட இவ்வுலகில்
அமுதத்தில் நஞ்சுண்டு
குழந்தை குடிக்கும் பால்மாவில் கலப்படமாமம்,
இதற்குமப்பால் மருந்திலும் நஞ்சுண்டு,
இவை தான் சடப்பொருளென்றால்,

உணர்வுகளும் போலியாகிப்போனதுதான் விந்தையன்றோ.

"காதல்" உன்ற புனித சொல் சொல்லி
போக்கிரிகள் நடமாடும் காலமிது.
நடைமுறையில் தொகை தொகையாய் உதாரணங்கள்
ஏமாற்றப்பட்ட கன்னியரின் கதறல்கள் கேட்கலையோ?
ஏமாறிய காளையரின் சோகங்கள் புரியலையோ?



பொய்க்காதல் சதிவலையில் சிக்கி கதியற்றுப்போன
கன்னியரின் சோகம் இது.
அண்ணன் அறைந்தது போக
மீதியாய் அப்பா மிதித்து விடுகிறார்,
தாயவளின் ஒப்பாரி காதுகளை
ஈட்டியாய் குத்திப்பபோகிறது,
நான்கு திசையெங்கும் சிட்டுக்குருவியாய்
பறந்து திரிந்தவள்,
நான்கு சுவர் அறையினுள் பூட்டிக்கிடக்கிறாள்.
கண்ணீர் நனைத்து விட்ட தலையணைகள்,
காய வழியின்றி தொடர்ந்து ஈரமாய்
தலைக்குமேல் வளை எட்டவில்லை,
தன் வாழ்க்கையை முடித்துக்கொள்ள
அவளால் முடியவில்லை.

எத்தனை எத்தனை சோகங்கள்,
சில வெளியுலகு கண்டறியும்
பல தெரியாமலே மறைந்து விடும்.
போலிக்காதல் என்ற சேற்றில் கால் புதைத்து
மாண்டு போன காளையர் எத்தனைபேர்,
முதலில் படிப்பிழந்தான்,
பின்னர் பணமிழந்தான்,
ஈற்றில் தன்னையே இழந்தான்.

இதுவரை வீட்டில் வாழ்ந்தவன்,
இப்பொழுது மதுச்சாலையில் வாழ்கிறான்.
புகை ஊதி புகைந்து போகிறான்,
தினம் “சேவ்” செய்யும் அவன் நாடி
தாடி எனும் போர்வையை நிரந்தரமாய் போர்த்துக்கொண்டது.
பட்டம் பெறுவதற்காய் பல்கலைக்கழகம் சென்றவன்,
விசரன் என்ற பட்டம் பெற்று வீதியில் அலைகிறான்.

இவன் என்ன காதலின் எதிரியா?
அல்லது காதலில் தோற்றவனா? என எண்ணி விடாதீர்,
காதல் புனிதமானது, பலரும் சொன்னார்கள்,
நானும் அதை மீண்டும் மீண்டும் சொல்வேன்.

முக்தி வேண்டுமானால் பக்தி வேண்டும்,
பக்தியை அடைய இல்வாழ்க்கை வேண்டும்
இல்வாழ்க்கையை அளிப்பது, இனிய காதலன்றோ.
இப்படிச்சொல்கிறது சமயம்.
காதலிப்பவன் கவிஞராகிறான் இலக்கியம் சொல்கிறது.
காதல் இன்றேல் மனிதம் இல்லை
விஞ்ஞானம் சொல்கிறது.
இவ்வளவு உயரியது காதல்.
உண்மைக்காதலர்களே
உங்களை ஒரு முறை நான் வணங்குகிறேன்.
உங்களின் வாழ்க்கை பற்றிய உறுதியை வியக்கிறேன்.
நீங்கள் நடக்கும் நீதி எனும் வாழ்க்கைப்பாதையில்
ஒரு புல்லாய் இருந்து விட ஆசைப்படுகிறேன்.



## About the Author

| | |
|---|---|
| Name | : Ananthamyl Nithlavarnan. |
| Date of Birth | : 08.07.1978 |
| School Education | : i) M/Mullaitivu R.C.Vidyalayam (1984 - 1988) |
| | ii) M/Mullaitivu Maha Vidyalayam (1989) |
| | iii) J/Vigneswara College, Karaveddy (1989 - 1997) |
| University Education | : B.Sc with Education (Hons), Faculty of Science, University of Jaffna. |
| Postgraduate Education | : Master of Education, University of Jaffna. |
| Present Occupation | : Assistant Lecturer (On contract), Department of Education. University of Jaffna |
| Honours and Awards related to creative activities | : i) Subramaniam Ratnarajah memorial scholarship for the best performance in short story and poems for the year of 2003, University of Jaffna. |
| | ii) First prize for short story competition in the student literati festival - 2002 (All Island level) University of Peradeniya. |